குருபாதம்

ஞானசம்பந்தம்

தருமை ஆதீனத் திங்கள் இதழ்

மலர் 47] பிரபவ ஆண்டு பங்குனித்திங்கள் 10-4-88 [இதழ் 5

தருமை ஆதீனம் நான்காவது குருமகாசந்நிதானம்
ஸ்ரீலஸ்ரீ மாசிலாமணி தேசிக சுவாமிகளிடம் ஞானோபதேசம் பெற்று

சிவ  சிவ

ஸ்ரீ காசியில் கேதாரகட்டத்தில் திருமடம் அமைத்து, சைவமும் தமிழும் வளர்த்து
தேசிய ஒருமைப்பாடு கண்ட
ஸ்ரீ குமரகுருபர சுவாமிகள் 300 ஆவது ஆண்டு நிறைவுவிழா

1988-மே மாதம் முதல் 1989-மே மாதம் முடிய நிகழ்வதை முன்னிட்டு
ஆதிகுமரகுருபர சுவாமிகள் திருவுருவப்படம் அன்பர்கட்குக் காட்சியளிக்கிறது

தருமையாதீனக் குருமுதல்வர்

ஸ்ரீலஸ்ரீ குருஞானசம்பந்தசுவாமிகள்

உ

குருபாதம்

ஸ்ரீ குருஞானசம்பந்தர்

அருள்வாக்கு

வேதாக மத்தின்
  விதித்தமுத்தி தானன்றி
நீதானே யின்பமென்றல்
  நீதியோ — பேதாய்
பெறுவானீ யாநந்தம்
  பேறென் றுரைத்த
தறியா திருந்தனைநீ யாம்.

— முத்திநிச்சயம் 7

ஆசிரியர் :-

வித்துவான்
இராமலிங்கத் தம்பிரான்
சுவாமிகள்

துணையாசிரியர் :-

மகாவித்துவான்
சி. அருணைவடிவேல்
முதலியார்

உ

குருபாதம்

ஞானசம்பந்தம்

தருமையாதீனத்திங்கள்இதழ்

மலர் 47 | 10–4–88 | இதழ் 5

உட்பொருள்

எண்		பக்கம்
1	ஸ்ரீ குமரகுருபர சுவாமிகள் 300 ஆவது ஆண்டு நிறைவு விழா ! ...	225
2	தருமை ஸ்ரீலஸ்ரீ குருமகா சந்நிதானம் அவர்கள் வழங்கிய ஆசியுரை ...	230
3	சுதந்திர இந்தியாவின் இன்றைய நிலை ...	237
4	குருபூஜை விழா திருநாள் விபரம் ...	240
5	ஆண்டு மலர்கிறது ...	241
6	புத்தாண்டுச் சிந்தனைகள்...! ...	242
7	அபிராமி அந்தாதி ...	243
8	மேலைநாட்டுத் தத்துவ மேதைகள் ...	247
9	போதமும் சித்தியும் ...	252
10	கடிதங்கள்	255, 267
11	கல்வி யுகத்திற்குத் தமிழ் (2) ...	256
12	தண்டியடிகள் ...	258
13	செய்திகள் ...	263
14	எதிர்காலம் ...	268
15	இதழ்வழிச் சைவசமயக் கல்வி IV. பாடம்–3. ...	273

குருபாதம்

ஞானசம்பந்தம்

மலர் 47 ★ இதழ் 5

தருமை ஆதீனத் திங்கள் இதழ்

பிரபவ பங்குனி 10—4—1988

பொன்தயங் கிலங்கொளிந் நலங்குளிர்ந்த புன்சடை
பின்தயங்க ஆடுவாய்! பிஞ்ஞகா! பிறப்பிலீ!
கொன்றையம் முடியினாய்! கூடலால வாயிலாய்!
நின்றயங்கி யாடலே நினைப்பதே நியமமே.

— திருஞானசம்பந்தர்.

ஸ்ரீ குமரகுருபர சுவாமிகள் 300 ஆவது ஆண்டு நிறைவு விழா!

ஓராண்டுப் பெருவிழா :

திருக்கயிலாய பரம்பரைத் தருமை ஆதீனம் நாலாவது குருமகாசந்நிதானம் ஸ்ரீலஸ்ரீ மாசிலாமணி தேசிக ஞானசம்பந்த பரமாசாரிய சுவாமிகளிடம் அருளுபதேசம் பெற்று, ஸ்ரீ காசியில் குமாரசுவாமித்திருமடங்கண்டு, பழுத்த தமிழ்ப் புலமை பாலிக்கப் பெற்று, சைவத்திற்கும் செந்தமிழ்க்கும் அணிசேர்க்கும் அருள் நூல்கள் பதினாறு யாத்தளித்து, இலக்கியச் செம்மலாய், இலக்கண வேந்தராய், அறநெறிச் சான்றோராய், பேரருளாளராய், இந்திய தேசிய ஒருமைக்கு வித்திட்ட ஸ்ரீ ஆதி குமரகுருபர சுவாமிகளின்

300 ஆவது ஆண்டு நிறைவு விழா 1988 மே மாதம் தொடங்கி, 1989 மே மாதம் நிறைய ஓராண்டுக் காலத்திற்கு, இந்திய நாடெங்கும் சீரும் சிறப்புமாகக் கொண்டாடப்படவிருக்கிறது. ஸ்ரீ குமரகுருபர சுவாமிகளை நினைவு கூர்ந்து, அவர்தம் 300 ஆண்டு நிறைவுப் பெருவிழாவைத் திட்டமிட்டுக் கொண்டாட ஞான சம்பந்தம் அன்புடன் நேயர்கட்கு வேண்டுகோள் விடுக்கின்றது.

அருள்வாழ்வு :

தென்பாண்டி நாட்டில் ஸ்ரீ வைகுண்டத்தை அடுத்த ஸ்ரீ கைலாசம் என்ற சிற்றூர் ஸ்ரீ குமரகுருபர சுவாமிகள் அவதரிக்கும் தவத்தைச் செய்தது. சைவவேளாளர் மரபில் சண்முக சிகாமணிக் கவிராயர் சிவகாமசுந்தரி அம்மையார் ஆகிய அருந்தவத் தம்பதியரின் பெருந்தவ மகவாய்த் தோன்றிய சுவாமிகள், செந்திலாண்டவன் திருவருளால் ஊமை நீங்கப் பெற்றுத் தம் ஐந்தாம் ஆண்டிலேயே கந்தர்கலிவெண்பா என்னும் சைவ சித்தாந்தத் தெளிபொருள் நூலைப் பாடியருளினர். திருவருளால் உவமையிலாக் கலைஞானமும், உணர்வரிய மெய்ஞ் ஞானமும் கைவரப் பெற்ற சுவாமிகள் பல்துறை நூல் பல யாத்தளித்தருளினர்கள். மதுரையில் ஸ்ரீ மீனாட்சியம்மையின் திருவருள்பெற்று, திருமலை நாயக்கரால் ஆதரிக்கப் பெற்ற சுவாமிகள் திருவாரூர், புள்ளிருக்குவேளூர், சிதம்பரம் முதலிய தலங்களை வழிபட்டு அவ்வத் தலங்கள் தொடர்பாய்ச் சிற்றிலக்கியங்கள் பாடிப் போற்றினர்கள். தருமையில் வாக்குத் தடைப்பட, ஸ்ரீ மாசிலாமணிதேசிக சுவாமிகளிடம் ஞானோபதேசம் பெற்றுப் பண்டார மும்மணிக்கோவை பாடிப் பரவினர்கள். பின்னர்க் குருவருளாணைப்படி காசி சென்று கலைமகள் அருளால் இந்திமொழி கைவரப்பெற்று முகலாய மன்னரின் வேண்டு கோட்படி அற்புதம் புரிவாராய்ச் சிங்கத்தின் மீதமர்ந்து கவிராஜ சிங்கமாய் உயர்ந்து, காசியில் குமாரசுவாமித் திருமடம் கண்டு மும்முறை தருமபுரம் வந்து குருவருள் போற்றி நூல் பல அருளி, இரு கருடன் வட்டமிடும் கேதார கட்டத்தை முகலாய மன்னரின் நன்கொடையாய்ப் பெற்று, கேதார ஈசர் ஆலயம் அமைத்து ஒரு வைகாசி கிருஷ்ணபக்ஷத் திருதியையில் சிவபெருமான் திருவருளாகிய கங்கையில் ஜலசமாதி கூடியருளினர்கள்.

தமிழ் நூற்கடல் :

ஸ்ரீ குமரகுருபரசுவாமிகள் அருளிய நூல்கள் யாவும் தமிழ், சைவ இலக்கிய வரலாற்றில் தனிச்சிறப்போடு போற்றத்தக்கன.

போற்றப்பட்டும் வருகின்றன. சைவ சித்தாந்த சாரமாய், தலை சிறந்த பாராயண நூலாய், குட்டிக்கந்தபுராணம் எனப் போற்றப் பெறும் கந்தர்கலிவெண்பா; 'தொடுக்கும் கடவுள் பழம்பாடல் தொடையின் பயனாய்' விளங்கும் மதுரை மீனாட்சியம்மையின் மீது பாடியருளிய பிள்ளைத்தமிழ்; தமிழ்க் கலம்பகங்களின் வரிசையில் முன்வைத்துப் போற்றப்படும் மதுரைக்கலம்பகம், இலக்கியச் சுவை நனி சொட்டச்சொட்ட அருளப்பெற்ற முத்துக்குமார சுவாமி பிள்ளைத்தமிழ்; அளப்பரிய குருபக்தியின் உச்சியில் பழுத்த பண்டார மும்மணிக்கோவை; கலைமகட்கோர் மணியாரமாய சகலகலாவல்லிமாலை; சைவபரமாய், யாப்பருங்கலக் காரிகை உரை மேற்கோளாய்ப் பாடப்பெற்ற சிதம்பரச்செய்யுட்கோவை; திருமலைநாயக்கமன்னன் வேண்டுகோட்படி வள்ளுவர் வழியில் எளிய இனியநடையில் அறங்கூறவந்த நீதிநெறிவிளக்கம் முதலிய படைப்புக்கள் ஸ்ரீ குமரகுருபர சுவாமிகள் தன்னேரிலாத தமிழ்ப் படைப்புக்கள்.

தமிழ்ப் பற்று :

செந்தமிழையும் சிவநெறியையும் தம் இருகண்களாகப் போற்றிய சுவாமிகள், அவற்றின் அழகையும் உயர்வையும் நெஞ்சாரப் போற்றிச் செய்துள்ளார்கள். தமிழ் மொழியையே தெய்வீகத்தன்மை மிக்கதாக உணர்ந்த சுவாமிகள் அதனைத் தெய்வத்தமிழ் என்றே அழைத்தார்கள். இறைவன், உமை, முருகன் ஆகிய மூவரும் மதுரைக்கு ஒருசேர எழுந்தருளியமை 'தண்டமிழ் மதுரம் கூட்டுண எழுந்தவேட்கையால்' என்கிறார்கள். மீனாட்சியம்மையை,

> '... நறைபழுத்த
> துறைத் தீந்தமிழின் ஒழுகுநறுஞ் சுவையே'

என்றும்,

> 'முதுதமிழ் உததியில் வருமொரு திருமகள்'

என்றும், 'தமிழொடு பிறந்து பழ மதுரையில் வளர்ந்த கொடி' என்றும், தமிழோடு இணைத்துக் காணுகின்றார்கள். சிவபிரானை,

> 'பண்முத் தமிழ்க்கோர் பயனே'

என்றும், முருகப்பெருமானை,

'தெளிதமிழின் வடித்திடு நவரசமே'

என்றும், திருமாலே,

'பைந்தமிழ்ப் பின்சென்ற பச்சைப் பசுங்கொண்டல்'

என்றும், கலைமகளை,

'மதுர மொழுகும் கொழிதமிழ்ப் பனுவல்
துறைப்படியும் கூந்தலம்பிடி'

என்றும் பலபடப் பாராட்டுகின்றார்கள்.

300 ஆவது ஆண்டு விழா :

சைவ சமயம் பெற்றெடுத்த பல்கலைக் குரிசிலாய்த் திகழ்ந்த ஸ்ரீ குமரகுருபரசுவாமிகள் ஸ்ரீ காசியில் தோற்றுவித்து அருளிய குமாரசுவாமித் திருமடம், ஸ்ரீ காசிவாசி தில்லை நாயக சுவாமிகள் காலத்தில் கி. பி. 1720 இல் திருப்பனந்தாளிலும் அருளறப் பணிகள் இயற்றக் கிளை மடமாக நிறுவப்பெற்றது. தருமைக் குருமணியின் அருளாசியின் வண்ணம் திருப்பனந்தாள் ஸ்ரீ காசி மடத்தின் அதிபராகத் திகழும் கயிலைமாமுனிவர் ஸ்ரீ காசிவாசி முத்துக்குமாரசுவாமித் தம்பிரான் சுவாமிகள் ஆதி குமரகுருபர சுவாமிகளின் 300 ஆவது ஆண்டு நிறைவுப் பெருவிழாவை இந்திய நாடெங்கும் பெருஞ்சிறப்போடு கொண்டாடத் திட்டமிட்டுள்ளார்கள். ஓராண்டுக் காலம் நடை பெறும் இப்பெருவிழா குமரகுருபர சுவாமிகளோடு தொடர்புடைய தலங்களில், அவர்கள் அருளிச்செய்த இலக்கியங்களின் சிறப்பும், பெருமையும் விளங்கித் தோன்றுமாறு மாநாடுகளும், கருத்தரங்கங்களும், இலக்கியப் பேருரைகளும் நிகழ்த்தப் பெறவுள்ளன. தமிழ் நாட்டிலும், பிற மாநிலங்களிலும் சமயத் தமிழ்ப்பணி ஆற்றி வரும் அமைப்புக்கள் ஸ்ரீ குமரகுருபர சுவாமிகளின் 300 ஆவது ஆண்டு நிறைவு விழாவைத் தத்தம் பொறுப்பில் ஒல்லும் வகையெல்லாம் சிறப்பாக நடத்த முன் வந்துள்ளன. ஸ்ரீ காசி மடத்தின் சார்பில் மிகப் பெரிய அளவில் விழாக்குழு அமைத்துஅதன் சார்பில் இவ்விழாவிற்கான ஏற்பாடுகள் செய்யப் பெற்று வருகின்றன. சுவாமிகளின் திருவுருவம் அமைத்தல்; படத்திறப்பு; நிலைநிதி அமைத்தல்; பல்கலைக்கழக அறக்கட்டளைச் சொற்பொழிவுகள்; மாநாடுகள்; கருத்தரங்கங்கள்; நூல் வெளியீடு; மாணாக்கர்களுக்குப் போட்டிகள் அமைத்துப் பரிசுகள் வழங்குதல் எனப் பல அங்கங்களோடு 300 ஆவது ஆண்டு

நிறைவுவிழா ஓராண்டு முழுவதும் நடைபெற உரிய ஏற்பாடுகள் நடைபெற்று வருகின்றன.

விழாக்குழு :

தருமை ஆதீனம் 26 ஆவது குருமகாசந்நிதானம் ஸ்ரீலஸ்ரீ சண்முக தேசிக ஞானசம்பந்த பரமாசாரிய சுவாமிகள் அவர்கள் விழாக்குழுவின் புரவலராகஅமர்ந்து விழாச்சிறக்க அருள்பாலித்து உள்ளார்கள். காசிவாசி ஸ்ரீ முத்துக்குமார சுவாமித் தம்பிரான் சுவாமிகள் தலைமையில் அமைக்கப்பட்டுள்ள விழாக் குழுவில் பல்துறை அறிஞர்களும் இடம்பெற்றுள்ளனர். ஸ்ரீ குமரகுருபர சுவாமிகளின் அருளியல் வாழ்வையும், அளப்பரிய புலமையையும் உலகறியச் செய்யவேண்டுமென்ற ஒப்பற்ற நோக்கில் நடைபெற வுள்ள இப்பெருவிழாவில் இந்தியாவிலும் உலகெங்கிலும் வாழும் தமிழ் மக்களும், சைவப் பேரன்பர்களும் உரிய ஈடுபாட்டுடன் பங்கேற்க வேண்டும் என்பதே ஞானசம்பந்தத்தின் வேண்டுகோள்.

தமிழர் கடன் :

தமிழ் அன்பர்களும், தமிழ் வளர்க்கும் நிறுவனங்களும், செயலாளர், ஸ்ரீ குமரகுருபரர் 300 ஆவது ஆண்டு நிறைவு விழாக் குழு, ஸ்ரீ காசிமடம், திருப்பனந்தாள் (அஞ்) 612 504 தஞ்சை மாவட்டம் என்ற முகவரியோடு தொடர்பு கொண்டு, உரிய ஆலோசனையும், இசைவும் பெற்று இப்பெருவிழாவை மிகச் சிறப்பாக நாடெங்கும் கொண்டாட வேண்டுகின்றோம். தமிழே உயிராக, சைவமே வாழ்வாக, ஒருமைப்பாடே குறிக்கோளாக வாழ்ந்து வளம்சேர்த்த ஓர் அருளாளரின் அரியவிழா அமைகிறது. நன்யறிதலாகிய கடமை உணர்வோடு தமிழகமும் தமிழர்களும், சைவர்களும் இவ்விழாவைக் கொண்டாடி மகிழ்தல் இன்றியமை யாதது. தலையாய கடப்பாடுடையது.

"திமிரம தகற்றும் தெய்வக் கவிஞன்
குமர குருபரன் குரைகழல் போற்றுவம்"

உ

குருபாதம்

திருக்கயிலாய பரம்பரைத் தருமை ஆதீனம்

26 ஆவது குருமகாசந்நிதானம்

ஸ்ரீலஸ்ரீ சண்முக தேசிக ஞானசம்பந்த பரமாசாரிய சுவாமிகள்

குன்றக்குடி, திருவண்ணாமலை ஆதீனமும், காரைக்குடி, அழகப்பா பல்கலைக் கழகமும் இணைந்து நடத்திய

திருக்கோயில், சமயம், கலை, சமுதாய ஆய்வுக் கருத்தரங்கில்

தலைமைவகித்து வழங்கியருளிய

ஆசியுரை

9—4—1988

சிவனடியே சிந்திக்கும் திருப்பெருகு சிவஞானம்
பவமதனை அறமாற்றும் பாங்கினில்ஓங் கியஞானம்
உவமையிலாக் கலைஞானம் உணர்வரிய மெய்ஞ்ஞானம்
தவமுதல்வர் சம்பந்தர் தாம்உணர்ந்தார் அந்நிலையில்.

— பெரியபுராணம்.

ஞானம் இருவகைப்படும். ஒன்று கலைஞானம், மற்றொன்று மெய்ஞ்ஞானம். கலைஞானம் மெய்ஞ்ஞானத்திற்கு ஆதரவானது; அடிப்படையானது. கலைஞானம் என்பது உலகியல் ஞானம். மெய்ஞ்ஞானம் என்பது இறையியல் ஞானம். இவ்விரு வகை ஞானத்தையும் நாம் அடையத் துணை புரிவன கலைக்களஞ்சியமாகத் திகழும் நமது திருக்கோயில்களே. ஆனால் இன்று கலைஞானத்தைக் கல்வி நிலையங்களும் பல்கலைக்கழகங்களும் மெய்ஞ்ஞானத்தைத் திருமடங்களும் திருக்கோயில்களும் வளர்ந்து வருகின்றன. எனவேதான் கலைஞான நிலையமாகத் திகழும் அழகப்பா பல்கலைக்கழகமும், மெய்ஞ்ஞான நிலையமாகத் திகழும் குன்றக்குடி திருவண்ணாமலை ஆதீனமும் இணைந்து இக் கருத்தரங்கினைச் சிறப்பாக நடத்துகின்றது. இது திருவருட் பொருத்தமாகவே அமைந்துள்ளது.

கடமையும், பொறுப்பும் :

தமிழகத்தின் தொன்மைச் சமயங்களாகிய சைவமும் வைணவமும், நம் நாட்டுக்குத் தந்த காலத்தால் அழியாத பரிசுகள் திருக்கோயில்கள். வழிபாட்டுக்கு நிலையங்களாகத் திகழ்ந்த திருக்கோயில்கள் காலப்போக்கில் பல்வேறு கலைகளுக்கும் உறைவிடங்களாகத் திகழ்ந்தன. இவற்றை எல்லாம் இறையுணர் வோடு படைத்துக் காத்துப் பயன்கொண்டது நமது சமுதாயம். காலப்பழமையும், சாலப்பெருமையும் பெற்று விளங்கிய தமிழர் சமுதாயம், காலப்போக்கில் தனது பாரம்பரியப் பெருமைக்குக் கட்டியங் கூறிநின்ற சமயங்கள், திருக்கோயில்கள், கலைகள் ஆகியனவற்றை உரியவாறு போற்றத் தவறியது. இதனுல் ஏற்பட்ட இழப்பு, திருக்கோயில்களும் சமுதாயமும் பாதிக்கப் பெற்றன. இந்நிலையில் உலகளாவிய பெருமைமிக்க நமது சமயங்கள், திருக்கோயில்கள், கலைகள், சமுதாய அமைப்புக்கள் முதலியவற்றின் நிலைகளை ஆராய்ந்து, இவற்றின் பெருமையை யும், சிறப்பையும் மக்களுக்கு உணர்த்த வேண்டிய கடமையும் பொறுப்பும் கல்வி மற்றும் அறநிலையங்களுக்கு உண்டாயின. இதன் வெளிப்பாடாகவே இன்றைய கருத்தரங்கம் தொடங்கப் படுகிறது.

திருக்கோயில்கள் :

'கோயில் இல்லா ஊரில் குடியிருக்க வேண்டா' என்றும் 'ஆலயம் தொழுவது சாலவும் நன்று' என்றும் நம்முன்னோர் திருக்கோயில்களின் இன்றியமையாமையையும், வழிபாட்டின் சிறப்பினையும் விதந்துரைத்தனர். புறநானூற்றிலேயே 'முக்கட் செல்வர் நகர்' எனச் சிவபெருமான் திருக்கோயில் குறிக்கப்படு கிறது. சிலப்பதிகாரத்தில்,

> '' பிறவா யாக்கைப் பெரியோன் கோயிலும்
> அறுமுகச் செவ்வேள் அணிதிகழ் கோயிலும்
> வால்வளை மேனி வாலியோன் கோயிலும்
> நீலமேனி நெடியோன் கோயிலும்
> மாலைவெண்குடை மன்னவன் கோயிலும் ''

எனச் சிவன், முருகன், பலதேவன், திருமால், இந்திரன் முதலியோர்க்குக் காவிரிப்பூம்பட்டினத்தில் திருக்கோயில்கள் இருந்தமை குறிக்கப்பட்டுள்ளது. கடைச் சங்க காலச் சோழ வேந்தன் கோச்செங்கணன் காவிரிக்கரையில் எழுபது மாடக் கோயில்கள் அமைத்த திறத்தைத் தேவாரங்களும், பெரிய புராணமும் போற்றியுரைக்கின்றன.

" இருக்கிலங்கு திருமொழிவாய் எண்தோள் ஈசற்கு
எழில்மாடம் எழுபது செய்து உலகம் ஆண்ட
திருக்குலத்து வளச் சோழன் சேர்ந்த கோயில்
திருநறையூர் மணிமாடம் சேர்மின்களே. "

எனவரும் திருமங்கையாழ்வார் பெரிய திருமொழியும் இதனை அறிவிக்கின்றது. திருக்கோயில்களில் நிகழ்த்தப்பட்ட வழிபாட்டு நெறிமுறைகள் பலவற்றை இலக்கியங்கள், கல்வெட்டுக்கள், செப்பேடுகள் முதலியன விரித்துரைக்கின்றன.

திருக்கோயில் அமைப்பும் வகையும் :

திருக்கோயில்களின் அமைப்பும், பல்வேறு வகைகளும் திருநாவுக்கரசரின் அடைவுத் திருத்தாண்டகம் ஒன்றில் விளக்க மாக உரைக்கப்பட்டுள்ளன.

" பெருக்காறு சடைக்கணிந்த பெருமான் சேரும்
பெருங்கோயில் எழுபதினோ டெட்டும் மற்றும்
கரக்கோயில் கடிபொழில்சூழ் ஞாழற் கோயில்
கருப்பறியற் பொருப்பனைய கொகுடிக்கோயில்
இருக்கோதி மறையவர்கள் வழிபட் டேத்தும்
இளங்கோயில் மணிக்கோயில் ஆலக் கோயில்
திருக்கோயில் சிவனுறையும் கோயில் சூழ்ந்து
தாழ்ந்திறைஞ்சத் தீவினைகள் தீரும் அன்றே "

தேவார மூவர் காலத்திலேயே இருநூற்றுஎழுபதுக்கும் மேற்பட்ட கோயில்கள் தமிழகத்தில் பெருஞ்சிறப்போடு திகழ்ந்திருந்தமை அறியப்படுகிறது. பல்லவர் காலத்தில் குடைவரைக்கோயில்களும், கருங்கற்கோயில்களும் உருவாயின. பிற்காலச் சோழர் ஆட்சிக் காலத்தில் இவை கலைவளர் மாளிகைகளாக உயர்ந்தன.

கோயிலும் சமயமும் :

சமயஞ் சார்ந்த வழிபாட்டிடங்களாகத் தொடங்கப் பெற்ற கோயில்கள், காலப்போக்கில் சமய வாழ்வின் அடித்தளங்களாக உயர்ந்தன. திருக்கோயில் வழிபாடு சமய வாழ்வில் பெரும் பங்கு வகித்தது. வேதங்கள் குறித்துக் காட்டாத திருக்கோயில் அமைப்பினைத் தமிழர்களுக்கே உரிய ஆகமங்கள் விரித்துள்ளன. மக்கள் தத்தம் அறிவிற்கும், உணர்விற்கும் தக்கவாறு பல்வேறு தெய்வத் திருமேனிகளை எழுந்தருளுவித்து வழிபாடாற்றினர். இவ்விறையவர் பற்றிய தத்துவங்களும், புராணங்களும் தோன்றி வளர்ந்தன. இசைக்கூறும் கலைகளும் உருப்பெற்றன. சமய வாழ்வின் அடித்தளமாகத் திருக்கோயில்கள் திகழ்ந்தன. தமிழ் மொழியின் மாபெரும் வளர்ச்சிக்குச் சமயங்கள் வளர்த்த திருக்கோயில்கள் ஊற்றம் தந்தன. தத்துவங்களும், தத்துவ உரைகளும், ஆசாரியப் பெருமக்களும் உருவாக உதவின.

சமயம் வளர்த்த கலைகள் :

தமிழர் சமயமும், திருக்கோயில்களும் திட்டமிட்டுக் கலைகள் பலவற்றை வளர்த்தன. இசைக்கலை, நடனக்கலை, ஓவியக்கலை காவியக்கலை, சிற்பக்கலை, கட்டிடக்கலை எனக் கலைகள் செழித்தன. தங்கள் அரண்மனைகளைச் செங்கற்களால் கட்டிக்கொண்ட தமிழ் மன்னர்கள், திருக்கோயில்களைக் கருங்கற்களால்புதுக்கினர். கலை வல்லுநர்கள் திருக்கோயில்களில் நியமனம் பெற்றனர். பலதரப்பட்ட மானியங்களும், முற்றூட்டுகளும், நிபந்தங்களும் அவர்களுக்கு வழங்கப்பெற்றன. திருக்கோயில்களை ஒட்டிக் கலைகள் வளர்ந்த காலத்தில் அவை தெய்விகத் தன்மை யுடையனவாய் மக்களை நன்னெறிப்படுத்திப் பண்படச் செய்தன.

இசைக்கலை :

'ஏழிசையாய் இசைப்பயனாய்' இறைவனைக் கண்டனர் தமிழ் மக்கள். 'அர்ச்சனை பாட்டேயாகும்' என இறைவனுக்கு இசைப் பாடல்களால் போற்றி செய்தனர். சமய எழுச்சி இசைக்கலைக்கு ஊற்றம் தந்த திறத்தை 'நாளும் இன்னிசையால் தமிழ் பரப்பும் ஞானசம்பந்தன்' என்ற தேவாரத் தொடர் மெய்ப்பிக்கிறது. இன்று தென்னகம் எங்கும் பரந்து விரிந்து, உலகம்வரை ஈர்க்கும் கர்நாடக இசையின் மூலகங்களாகப் 'பண்கள்' போற்றி வளர்க்கப் பெற்றன. தோற்கருவி, துளைக்கருவி, நரம்புக்கருவி, மிடற்றுக் கருவி, கஞ்சக்கருவி எனப்பண்கள்இசைக்கருவிகளின் வளர்ச்சிக்கும் வாழ்விற்கும் துணையாயின. தேவாரப் பாடல்கள் 'பண் சுமந்த பாடல்' எனப் போற்றப்பெற்றன. நூற்று மூன்று பண்கள் என்று பகுக்கப் பெற்றவற்றுள், தேவாரத் திருமுறைகளுள் இருபத்து நான்கு பண்கள் இடம்பெற்றுள்ளன. இராசராசசோழன்தஞ்சைப் பெரியகோயிலில் 48 ஓதுவார்களைநியமித்து ஆலயங்களில்திருமுறை ஓத வழிவகுத்ததைக் கல்வெட்டுக்கள் காட்டும்.

நடனக்கலை :

இசைக்கலையின் உன்னதமான வளர்ச்சியோடு நடனக்கலையும் திருக்கோயில்களில் பெருவளர்ச்சி பெற்றது. இயல் என்பது கருத்து. அதாவது எண்ணங்கள். கருத்தில் மக்களை ஈர்க்க ஓசையூட்டிக் கூறப்பட்டபோது இசை பிறந்தது. கருத்தை மெய்ப்பாடுதோன்ற இசைவடிவில் காட்டமுற்பட்டபோது நடனக் கலை உருப்பெற்றது. கதை பொதி நடனங்கள் நாடகங்களாக உருப்பெற்றன. சிவபரம்பொருளை அம்பலத்து ஆடுவானாய், திருச்சிற்றம்பலத்துள் நின்று பொற்புடன் நடஞ்செய்வானாய், ஆனந்த நடராசனைத் தமிழர் போற்றினர். திருமுறைகள் நடனம்

பற்றிய அரிய குறிப்புக்கள்பலவற்றைத்தருகின்றன. திருக்கோயில்களில் காணப்படும் நடன முத்திரைகளோடு கூடிய மகளிர் சிற்பங்களும், அவற்றில் காணப்படும் பாவனைகளும், நாட்டியக் கலையின் பெருவளர்ச்சிக்குச் சான்று பகர்கின்றன. சிலப்பதிகாரத்தில் மாதவி ஆடிய பதினோராடல் விரித்துரைக்கப் பெற்றுள்ளது. தஞ்சைப் பெரியகோயிலிலும், தில்லைத் திருக்கோயிலிலும் விழாக் காலங்களில், இசையுடன் கூடிய நாடகங்கள் நடிக்கப் பெற்றுள்ளன. நடன மாதர்கள் கோயில்களில் நியமனம் பெற்று இறைவன் திருமுன்னர் இசையொடு கூத்தியற்றியுள்ளனர். இத்தகைய அரிய நடனம், மற்றும் நாட்டியக் கலைகள் காலப் போக்கில் பல்வேறு காரணங்களால் உருக்குலைந்து போயின.

ஓவியக்கலை :

தமிழகத் திருக்கோயில்கள் மிக உன்னதமான ஓவியக்கலை வளர்ச்சிக்குப் பெருந்துணையாக நின்றுள்ளன. சமயஞ்சார்ந்த வரலாறுகளும், ஐதிகச் செய்திகளும் பல வண்ணங்களால் திருக்கோயிற் சுவர்களிலே தீட்டப் பெற்றன. சித்தன்னவாசல் ஓவியங்கள் காலப் பழமையுடையன. மதுரை, திருப்பரங்குன்றம், திருவையாறு, திருவாரூர்த் திருக்கோயில்களிலும் தொன்மையான ஓவியங்கள் இடம்பெற்றிருந்தன; இருக்கின்றன. இவற்றின் நுட்பமான பேரழகு, காண்போரை ஈர்க்கும் திறங்கொண்டன. கல்வி நிறைவு பெறாத பாமரர்களையும் ஓவியக்கலை ஈர்த்துச் சமயத் துறையில் நாட்டங் கொள்ள வைத்தது. இத்தகு ஓவியம் தீட்டும் சுவர்ப்பூச்சுக்களும், ஓவிய வண்ணங்களின் தயாரிப்பும் பற்றிய செய்திகளைக் கல்வெட்டுக்கள் விரித்துரைக்கின்றன.

இலக்கியக்கலை :

ஓவியங்களை வளர்த்து வாழ்வித்த திருக்கோயில்கள் தமிழ் மொழியில் அரிய காவியங்களையும் வளர்த்தன. தமிழ் இலக்கிய வரலாற்றில் கி. பி ஏழாம் நூற்றாண்டுக்குப் பிற்பட்ட கால இலக்கிய வளர்ச்சியில் சமயத்தின் பங்கே பெரிது. புதிய இலக்கிய வடிவங்கள், சிற்றிலக்கியங்கள், சிறுகாப்பியங்கள், தனிப்பாடல்கள், புராணங்கள், பெருங்காப்பியங்கள், சாத்திரங்கள் எனப் பலவகை இலக்கியக் கூறுகளும் கோயில்களாலேயே வளர்த்தளிக்கப் பெற்றன. பக்தியையும், உயர் மனிதப் பண்புகளையும் வளர்க்கவும், பண்படுத்தவும் சமயஞ்சார்ந்த இலக்கியக்கலை பெருந்துணையாயிற்று. மனிதர்களைப் பாடாது, இறைவனையே பாடும் உறைப்பில் கவிஞர்கள் உயர்ந்தனர். தமிழர் வரலாற்றையும், நாகரிகத்தையும் இன்று நாம் அறியத் துணை நிற்பன காப்பியக் கலையேயாகும்.

கலைவளர் மாளிகைகள் :

தமிழர்களின் கலை வளர்ச்சியில், உலகினரைப் பெரிதும் ஈர்ப்பன, திருக்கோயில் கட்டிடக் கலைகளும், அவற்றில் இடம் பெற்றிருக்கும் சிற்பக்கலைகளுமேயாகும். அளப்பரிய பக்திப் பெருக்கில் எழுந்து நிற்கும் தமிழகக் கோயில்களும், கோபுரங் களும் வியப்பூட்டும் அற்புதங்களாகத் திகழ்கின்றன. தஞ்சைப் பெரிய கோயில், கங்கைகொண்ட சோழபுரம், தாராசுரம், திரிபுவனம் திருக்கோயில்களும், தென்காசி, கிருஷ்ணாபுரம், மதுரை, பேரூர்த் திருக்கோயில் சிற்பங்களும், திருவாரூர், மன்னார்குடி திருமதில்களும், ஆரூர் ஆழித்தேரும். மதுரைத் தெப்பக்குளம், திருவாரூர்க் கமலாலயம், வைத்தீஸ்வரன்கோயில் சித்தாமிர்தத் தீர்த்தம் முதலிய திருக்குளங்களும் தமிழரின் மிக உன்னதமான கலைவாழ்விற்குக் கட்டியம் கூறுவன,

கலைகளும் சமுதாயமும் :

திருக்கோயில்கள் நுண்கலைகளை வளர்த்ததோடு, ஆட்சிக் கலைக்கும் ஆக்கம்தந்தது. ஊர்ச்சபையும், கோயில் நிர்வாகச் சபை களும் முறையான நல்லாட்சிக் கலைக்கு வழிகாட்டின. பல்லாயிரக் கணக்கான கல்வெட்டுக்களைப் பாதுகாத்து வரலாற்றுக்கு ஒளிகாட்டுவனவும் திருக்கோயில்களே. ஆயினும், இவை இன்னும் முழுதும் ஆராயப்படவில்லை. மற்றும் சித்த மருத்துவம், சோதிடம் முதலிய கலைகளுக்கும் திருக்கோயில்கள்வாழ்வளித்தன. சுருங்கச் சொன்னால் தமிழர் சமுதாய வாழ்வு திருக்கோயில்களைச் சார்ந்தே அமைந்திருந்தது. சமய வாழ்வும் - சமுதாய வாழ்வும் ஒன்றுபட்டிருந்த காலத்தில் நிலவிய பண்பாடும், ஒழுக்கமும் உயர்பண்புகளும் இவை பிரிந்து நின்ற காலத்தில் குறைபலாயின.

இன்றைய நிலையில் கலைஞர்கள் தம்மை உருவாக்கிய கோயில் களை மறந்து மேடைநோக்கிச் செல்வதையே காண்கிறோம். 'எல்லாக் கலைகளும் இறைவனிடத்திலிருந்து தோன்றியனவே' என்ற உண்மையையும் 'அலகில் கலையின் பொருட்கு எல்லை இறைவனது ஆடும் கழலே' என்ற தத்துவத்தையும் கலைஞர்கள் உணர்ந்து ஆலயங்களில் நிகழும் விழாக்களில் தங்கள் கலை நலங்களை பக்தியுடன் இறைவனுக்குக் காணிக்கையாக்கிப் பொருளோடு அருளும் பெற முன் வரவேண்டும்.

வளர்ச்சிக்கு வாயில் :

சமூக வளர்ச்சி என்பது பண்பாட்டு வளர்ச்சியோடு இணைந்த தாகவே அமைய வேண்டும். பொருளாதார வளர்ச்சியில் சிறந்து, தனிமனித ஒழுக்கமும் சமூகப் பண்பாடும் குறையுமானால் அதனை உண்மையான வளர்ச்சியாக அறிஞர் உலகம் ஏற்காது. சமயம் திருக்கோயில்களையும் புனிதம்கெடாது போற்றி,மக்களையும்நெறிப் படுத்தி வளர்த்தது. இன்று நாம் அவற்றைக் கேளிக்கைக்காகவும்

பொழுது போக்கிற்காகவும் பயன்கொள்கிறோம். நுனிப்புல்மேயும் போக்கு வளர்ந்துவிட்ட நிலையில் இவைபற்றிய உண்மை ஆய்வுகளும் நிகழ்த்தப்படவில்லை. சமயம், திருக்கோயில், கலை சமூகம் என்பன ஒன்றோடு ஒன்று தொடர்புடையன. ஒன்றால் ஒன்று வளர்வன. இவற்றின் இணக்கத்திலேயே சமுதாய உயர்ச்சி அமைந்துள்ளது. சமயத்தால் சமுதாயமும் சமுதாயத்தால் சமயமும் வளர வழி வகைகாண வேண்டும். சிவாலயங்களில் வழிபாட்டு முறைகட்கு வடமொழியும், தோத்திரங்கட்குத் தமிழ் மொழியும் பயன்படுத்தப் படுகின்றன. வைணவக்கோயில்களில் திவ்வியப் பிரபந்தகட்கு முன்னுரிமை தந்து சாற்றுமுறை என ஒரு மரபை உண்டாக்கிப் பட்டாசாரியர்களும், அரையர்களும் தழைத்த தமிழில் உளங்கலந்து திருவாய் மொழிகளை ஓதி வருவது போலச் சிவாலயங்களில் அர்ச்சகர்களும் வடமொழி வழிபாட்டு முறைகளோடு மனங்குளிரத் திருமுறைகளை ஓதி வழிபடும்முறை உருவாக வேண்டும். இதை இவ்வாய்வரங்கம் வலியுறுத்துவது பயன் தரும்.

அறிஞர்கள் :

பாரம்பரியப்பெருமைமிக்க நமதுகலைகளை அவற்றின் உண்மை வடிவத்தைக் கண்டறிந்து போற்றி வளர்ப்பது கலைஞர்கள் கடன். திருக்கோயில்களை அவற்றின் புனிதம் கெடாது போற்றிக் காப்பது ஆட்சியாளர்களின் பொறுப்பு. சமயங்களின் இன்றியமையாமையையும், சிறப்புக்களையும் உரியவாறு வெளிப்படுத்துவது சமய நிறுவனங்களின் தலையாய பணி. இவற்றை உள்ளவாறு ஆய்ந்தறிந்து பயன்கொண்டு வளர்வது சமுதாயத்தின் தலையாய குறிக்கோளாதல்வேண்டும். சமயம்,திருக்கோயில், கலை, சமுதாயம் இவற்றின் பண்டைய இன்றைய நிலைகளை ஆராய்ந்து இவற்றின் வளர்ச்சிக்கு வழிவகுக்கும் நோக்கில் குன்றக்குடி திருவண்ணாமலை ஆதினமும், காரைக்குடி அழகப்பா பல்கலைக்கழகமும் சிறந்த முறையில் இரண்டுநாட்கள் கருத்தரங்கு நிகழ்த்துவதுபாராட்டத் தக்கது. அறிஞர்கள் பலர் கலந்து கொண்டு நல்ல பலகருத்துக்களை வெளிப்படுத்த உள்ளனர். கருத்தரங்கம் சிறப்புற நடைபெறவும், சமயமும் சமுதாயமும் நன்கினிது வளர்ந்து சிறக்கவும், பங்கு கொள்வோர் பலரும் பயன்பெற்றுச் சிறக்கவும் செந்தமிழ்ச் சொக்கன் திருவருளைச் சிந்திக்கின்றோம்.

குலவு மறையும் பலகலையும்
கொளுத்து வதன்முன் கொண்டமைந்த
நிலவும் உணர்வின் திறங்கண்டு
நிறுவும் மறையோர் அதிசயித்தார்
அலகின் கலையின் பொருட்கெல்லை
ஆடுங் கழலே எனக்கொண்ட
செலவு மிகுந்த சிந்தையினில்
தெளிந்தார் சிறிய பெருந்தகையார்.

— பெரியபுராணம்.

திருச்சிற்றம்பலம்

சுதந்திர இந்தியாவின் இன்றைய நிலை

செல்வி செ. கலைவாணி

[இக்கட்டுரை சென்னை, பாரதி அரசினர் பெண்கள் கல்லூரி — ஆண்டு மலரில் (1987–88) வெளிவந்தது. கட்டுரை, செல்வி செ. கலைவாணி (II வேதியல்) என்ற மாணவியால் எழுதப்பட்டது. நன்றி: ஆண்டு மலர் பாரதி அரசினர் மகளிர் கல்லூரி, சென்னை.]

''பாருக்குள்ளே நல்ல நாடு
எங்கள் பாரத நாடு''

என்று பாரதியார் அவருடைய பாட்டில் பாரதம் என்பதற்கே இலக்கணம் வகுத்துள்ளார். சுதந்திரம் என்பது தண்ணீர் ஊற்றி வளர்ப்பது அன்று; தியாகச் செந்நீரால் காக்க வேண்டிய பயிர். சுதந்திரம் அடைந்தால் மட்டும் போதாது; அதைப் பேணிக் காக்க வேண்டும்.

"அடிமை நாட்டிற்கு அரசியல் இருக்க முடியாது" என்று கூறினர் கோகலே. ஆதிக்கம் செலுத்திய அன்னிய ஆட்சியாள ராகிய பொதுப் பகைவனை எதிர்த்து நடந்த போராட்டத்திலே நாடு ஈடுபட்டிருந்த நிலையிலே, வாழ்வா, சாவா என்ற பிரச்சனையை எதிர்நோக்கி இருந்த நேரத்திலே, அரசியல் கட்சிகள் என்ற பாகுபாடுகளுக்கும், பிரிவுகளுக்கும், பிளவுகளுக்கும் இடமின்றி நாடு ஒரே குரலில், ஒரே நோக்கில், ஒரே குறிக்கோள் கொண்டு இயக்கினல் தான் விமோசனம் கிட்டும் என்று அனைவரும் ஒற்றுமை யுடன் பாடுபட்டனர்.

அந்த ஒற்றுமை இல்லாத காரணத்தினல் இன்று சுதந்திரம் அடைந்து 41 ஆண்டுகள் ஆகியும் நாட்டின் முன்னேற்றம் தடைப் பட்டுக் காணப்படுகிறது. நாட்டில் இலஞ்சமும், ஊழலும், பதுக்கலும் மலிந்து கிடக்கின்றன. பஞ்சம், பசி, வறுமை, பிணி ஆகியவை அதிகமாகக் காணப்படுகிறது. அன்று இருந்த ஒற்றுமை நிலை இன்று இருந்தால் நம்நாடு தான் முன்னேற்றத்தில் முதன்மையாக இருக்கும் என்று கூறுவது மிகையாகாது.

விடுதலைப்போராட்ட காலத்தில் கையாண்ட வழிமுறைகளையும், உத்திகளையும் இன்றைய சூழ்நிலைக்கேற்ப மாற்றித் திருத்தி அமைத்துக் கொள்ள வேண்டிய அவசியத்தை உணரமறுப்பது, வரலாற்று உண்மைகளையும், காலத்தின் கட்டாயங்களையும் உணர மறுப்பதாகும்.

அன்று தேவைப்பட்டது "போராட்ட உணர்வு". ஆனால் இன்று நமக்குத் தேவைப்படுவது "பொறுப்புணர்வு". அன்று அதிக அவசியமாயிருந்தது "வேகம்". இன்று தேவைப்படுவது 'விவேகம்'. அன்று தேவைப்பட்டது "ஆத்திரம், ஆவேசம் ஆர்ப்பாட்டம்". இன்று தேவைப்படுவது "அடக்கம், ஆக்கப்பணி, அமைதி".

அன்று "கிளர்ச்சி" அவசியம். இன்று "கட்டுப்பாடு" அவசியம்.

" தனி ஒருவனுக்கு உணவில்லை யெனில்
இந்த ஜகத்தினை அழித்திடுவோம் "

என்று பாடினான் பாட்டுக்கொரு புலவன் அன்று. ஆனால் இன்று பலருக்கு உணவு இல்லாமல் இருந்து, ஒருவனுக்கு உணவு இருந் திருந்தால் கூட இந்த ஜகத்தினை அழித்திட எவரும் இல்லை.

அரசியலில் ஆர்ப்பாட்டங்களும், சமூகத்தில் சீரழிவுகளும், மனத்தை மயக்கிடும் களியாட்டங்களும், சமூகத்தில் நடைபெறும் போராட்டங்களும், லஞ்ச ஊழல்கள் போன்ற அனைத்துப் பேய்களும் தலை விரித்து ஆடுகின்றன.

" கூட்டத்திற் கூடிநின்று, கூவிப் பிதற்றலன்றி
நாட்டத்திற் கொள்ளாரடி – கிளியே, நாளில் மறப்பாரடி "

என்று பாரதியார் அன்று வரைந்த கேலிச் சித்திரம் இன்று மலிந் துள்ள போலிவீரர்களுக்கும் புரட்டுக்காரர்களுக்கும் நீலிக்கண்ணீர்க் கூட்டத்தார்க்கும் நிலைத்துப் பொருந்துவதாய் உள்ளதே.

" ஊரைத் திருத்திட எண்ணினோம் — சொந்த
ஊழல் மிகுந்திடப் பண்ணினோம் "

நம் கேடுகள் அனைத்திற்கும் அன்று இருந்த அடிமைத்தனம் மட்டும் காரணமன்று. அதை அகற்றிய பின்னும் நம்மிடையே புகுந்துள்ள சீர்கேடுகள், ஒழுக்கச் சிதைவுகள், எண்ணச் சிறுமைகள் ஆகியவற்றைச் சுட்டிக் காட்டுகிறார் நாமக்கல் கவிஞர்.

பாடுபட்டதன் பலனைப் பறிகொடுத்துப் பரிதவிக்கும் பாட்டாளி மக்களின் பரிதாப நிலையைப் படம் பிடித்துக் காட்டுகிறார் ஜீவா.

" பாலின்றிப் பிள்ளை அழும்
பட்டினியால் தாய ழுவாள்
வேலையின்றி நாம ழுவோம் — என் தோழனே
வீடுமுச் சூடும் அழும். "

என்று கூறுகையில் சூழ்ந்திருக்கின்ற வறுமையையும், கல்வியிருக்கின்ற வேலையில்லாத்திண்டாட்டத்தையும், இருளையும் சுட்டிக் காட்டி இன்றைய நிலையை உணர்த்துகின்றார்.

"நாடு நமக்கு என்ன செய்தது" என்று கூறுவதைவிட "நாம் நாட்டிற்கு என்ன செய்தோம்" என்று இன்றைய தலைமுறையினராகிய இளைஞர்கள் கருத வேண்டும். விடுதலைப் போராட்டத்தில் நேரடியாகப் பங்கு கொள்ளும் வாய்ப்புப் பெற்றிருக்கவில்லை. எனினும் பண்பட்ட தேசிய பாரம்பரியத்திற்கு வளமான வரலாற்றுச் சொந்தக்காரர்களாவார்கள் இளைஞர்கள்.

அந்தச் சொந்த உணர்வு, இதய பூர்வமாக இலட்சிய அடிப்படையிலே, ஊன்றி, உறுதிப்பட்டு, செயலாக, சாதனையைக் குவிக்க வேண்டுமென்றால் பெருமை மிக்க அப்பாரம்பரியத்தை இன்றைய தலைமுறையினர் உயர்த்தி, இலட்சிய வழியில் நடத்திச் செல்ல வேண்டும்.

"மொழிப்பற்று இல்லாதவன் மூளி
நாட்டுப்பற்று இல்லாதவன் நடைப்பிணம்"

இரண்டு உணர்வுகளையும் இனிதே இணைத்து, ஏற்றமிகு எதிர்காலத்தை உருவாக்கும் பொறுப்பு இளைஞரை அழைக்கின்றது.

ஆதலால் இன்றைய இளைஞர்களின் தணியாத, தமிழ்க் காதல் தேசபக்தியாகக் கனிந்து, சுதந்திர வேட்கை சமதர்மப் பற்றாக வளர்ந்து, நிறைய வேண்டும். அரசியல் சுயேச்சையோடு ஆன்ம விடுதலையும் எய்தி நிறைவு பெற்ற மனிதன், நீதியும், நேர்மையும், நிலவும் சமுதாயத்தை அமைத்து, தாய்நாட்டோடு மட்டுமல்ல, தரணி முழுவதும் மனித இனத்துடன் ஒருமைப்பட்டு, உலக மக்களோடு மட்டுமல்ல, உயிரினங்கள் அனைத்துடனும் உறவு கொண்டு, அறத்தால் ஆட்சி செய்து, மக்கள் தன்மையால் மாண்பு பெற்று, புதியதோர் உலகு படைக்க முயல வேண்டும். எனவே,

"புதியதோர் உலகம் செய்வோம் – கெட்ட
போரிடும் உலகத்தை வேரோடு சாய்ப்போம்"

இச்சிறு முயற்சிக்குத் தமிழ்ச் சமுதாயம் நல்லாசி நல்கும் என்ற நம்பிக்கையில் இக்கட்டுரையை எழுதி உங்கள்முன் படைக்கிறேன்.

வாழ்க சுதந்திர இந்தியா !

உ

குருபாதம்

தருமை ஆதீனம்

ஸ்ரீ ஞானாம்பிகை உடனாகிய ஸ்ரீ ஞானபுரீசுவரசுவாமி திருக்கோயில் பெருவிழா

தருமை ஆதீனக் குருமுதல்வர்

ஸ்ரீலஸ்ரீ குருஞானசம்பந்தர் குருபூஜை விழா

சிறப்புத்திருநாள் விபரம்

விபவ ஆண்டு - வைகாசி மாதம்

தமிழ்த் தேதி	ஆங்கிலத் தேதி	கிழமை	சிறப்புத் திருநாள்
14	27—5—88	வெள்ளி	கொடியேற்றம்
18	31—5—88	செவ்வாய்	சகோபுர ரிஷபவாகனக் காட்சி
20	2—6—88	வியாழன்	திருக்கல்யாண விழா
22	4—6—88	சனி	திருத்தேர்
23	5—6—88	ஞாயிறு	ஸ்ரீலஸ்ரீ ஆதி குருஞானசம்பந்தர் குருபூசை விழா, மாகேசுவர பூசை.
24	6—6—88	திங்கள்	காலை : சிவபூசை
			நண்பகல் : மாகேசுவரபூசை
			இரவு : தருமை ஆதீனம் இருபத்தாறாவது குருமகாசந்நிதானம் ஸ்ரீலஸ்ரீ சண்முக தேசிக ஞானசம்பந்தபரமாசாரியசுவாமிகள் பட்டினப்பிரவேசம்.

விழா நாட்களில் காலைமாலை ஆகிய இருவேளைகளிலும் திருவீதியுலாக் காட்சியும், மாலை ஆதீனத் திருநெறிய தெய்வத் தமிழ் மன்றத்தில் விரிவுரைகளும் நடைபெறும். திருவீதியுலாவின் போது வேதபாராயணமும் திருமுறைப்பாராயணமும் நிகழும்.

பக்தர்கள் விழாவில் கலந்துகொண்டு திருவருளும் குருவருளும் பெற்று உய்வார்களாக.

ஆண்டு மலர்கிறது

பேராசிரியர் திரு. சொ. அரியநாயகம், எம். ஏ.,

ஆண்டு மலர்கிறது—புதிய
ஆண்டு மலர்கிறது—இள
வேனிலாய் உதித்து வேம்பில் இனித்துத்
தேனாய் மலர்கிறது—இனிய
வேளை புலர்கிறது—புதிய (ஆண்டு)

புதிய ராகம் புரியும் கீதம்
உதயம் புனைகிறது—நம்
இதயம் நனைகிறது—அதனால்
இமயம் உயர்கிறது—விபவ (ஆண்டு)

கடின உழைப்பின் கனிந்த பலன்களில்
விடியல் தெரிகிறது—வெற்றிப்
புதையல் தெரிகிறது—இன்று
விழிகள் மலர்கிறது விபவ (ஆண்டு)

சாதி சமய பேதம் நீங்க
நீதி வருகிறது—மன
நிம்மதி தருகிறது—இந்த
ஆண்டு தருகிறது—விபவ (ஆண்டு)

தருமை நதியில் பெருகி வருமோர்
குருவருள் விழைகிறது—மன
ஒருமை விளைகிறது—இந்த
ஆண்டு அருள்கிறது—விபவ (ஆண்டு)

புத்தாண்டுச் சிந்தனைகள்...!

திரு. அரங்க. முத்துமணி

அரும்பொருள்கள் யாவும் அடியார்தம் நெஞ்சிற்
கரும்பெனவே தித்திக்கக் காட்டும் — குருமணிகள்
பொன்போல் திருவடிகள் போற்றினேன் என்றென்றும்
இன்றுணை யாகும் எனக்கு !

வேறு

பிரபவ என்னும் யாண்டு, பின்னேக, மக்கள்வாழ்வில்
நிரந்தர இன்பந் தேங்க, நினைந்திடும் வடிவத்தோடே
அரன்தானும் தோன்று மாப்போல், அகிலத்தை வாழவைக்கப்
பிறந்தது விபவ வென்னும் பீடுசால் புத்தாண் டன்றே !

நன்மைகள் யாவு மிந்த நாளிலே தொடர வேண்டும்;
புன்மைகள் நீங்கிப் பொல்லா பூசல்கள் மாய்வதற்கே
அன்புதான் வேண்டும்; மூலர் அழகுறச் சொல்லு மாப்போல்
அன்பினைச் சிவத்திேைடு பிரிப்பவர் அறிவிலாதார் !

தமிழுடன் சைவந் தன்னைத் தனியாகப் பார்ப்போர் தாமும்
"தமதுடை முகத்துக் கண்கள் தம்மிலே ஒன்று போதும்
எமக்கிது கொள்கை யென்றால்" ஏற்பரோ அறிவின் மிக்கார் ?
இமைக்குள்ளே பாதுகாப்பாய் இரண்டுதான்; பார்வை ஒன்றே !

மனிதனின் வாழ்க்கை தன்னை மலையைப்போல் உயர்த்து தற்கும்
புனிதமார் ஒழுக்கந் தானே பொருந்திய துணையாம்; இந்த
இனிமையாம் ஒழுக்கந் தன்னை இயம்புதல் சமயமாகும்
கனிபோல இனிக்கும் சைவம் காட்டிடும் நெறியை யன்றே !

" புத்தாண்டில் மக்கள் புதுவாழ்வைக் கண்டிடுக
நித்தம் சமயநெறி நின்று! "

அபிராமி அந்தாதி

டாக்டர் புலவர் திரு. K. சந்தானராமன் M.A. D., Lit., Ph. D., D. P. P. A., D, U. N., I. U.
பருத்தியூர்.

விரும்பித் தொழும் அடியார் விழி நீர் மல்கி, மெய்புளகம்
அரும்பித், ததும்பிய ஆனந்தம் ஆகி, அறிவு இழந்து,
சுரும்பிற் களித்து, மொழி தடுமாறி, முன் சொன்ன வெல்லாம்
தரும்பித்தர் ஆவர் என்றால் அபிராமி சமயம் நன்றே.

அ. விரும்பித் தொழும் அடியார்.

(1) அம்பிகையினை உள்ள விருப்பத்துடன் வழிபடும் அடியார்களைக் குறிப்பிட்டு அவர்கள் எய்தும் மெய்ப்பாடுகளைக் கூறப் புகுகிருர்.

(2) இனிக் கூறப்போகும் மெய்ப்பாடுகள் ''தெய்வம் நம்மைத் தண்டித்துவிடும்'' என்ற அச்சத்தால் தொழுபவர்க்குத் தோன்ருது. அவ்வாறே ஆசையால் பயன் கருதி வழிபடுபவர்க்கும் தோன்ருது. ஏனெனில், அவர்கள் தமக்குப் 'பலன் கிட்டவேண்டும்' என்ற எதிர்பார்ப்பிலும், கிட்டியவுடன் எய்தப்போகும் எதிர்காலக் கற்பனையிலும் திளைத்திருப்பர்.

விரும்பித்தொழும் அடியார் கருணையினை நினைந்து நெக்குருகிக் கசிந்து கண்ணீர் மல்குவதால் மெய்ப்பாடுகள் எய்துவர்.

(3) அன்பிற்கும் உண்டோ அடைக்கும்தாழ் ஆர்வலர்
புன்கணீர் பூசல் தரும்.

என்றபடி விரும்பித் தொழுவார் தம் ஈடுபாட்டினையும், பக்தியையும் மறைக்க எண்ணினும் அவை தாமே வெளிப்பட்டுவிடும்.

ஆன்மீக வழியிலேயே மெய்ப்பாடுகள் பெரிதும் தோன்றுவதால் விரும்பித் தொழும் அடியார்களையே வள்ளுவர் 'ஆர்வலர்' என்று குறிப்பிட்டிருக்கலாம். ஏனெனில் திருமுருகாற்றுப்படையில் நக்கீரர் அடியார்களை 'ஆர்வலர்' என்று தான் குறிப்பிடுகிறார்.

(4) "விரும்பி நல் விளக்குத் தூபம்
விதியினால் இடவல் லார்க்குக்
கரும்பினில் கட்டிபோல் வார்
கடவூர் வீரட்ட னாரே"

என்றஅப்பர் தேவாரத்திலும் திருக்கடவூர்ப் பெருமானை 'விரும்பித்' தொழும் நிலை குறிப்பிடப்பட்டிருக்கிறது.

**ஆ. விழிநீர் மல்கி, மெய்புளகம் அரும்பித்
ததும்பிய ஆனந்தம் ஆகி, அறிவிழந்து,
சுரும்பிற் களித்து மொழி தடுமாறி.**

(1) அவ்வார்வலர் கண்களில் நீர் பெருகும். உடலில் மயிர்க் கூச்செறியும். பொங்கிடும் மகிழ்ச்சி மேலிடும். இறையனுபவம் நீங்கலான ஏனைய அறிவினை இழப்பர். மதுவுண்ட வண்டினைப் போல் களித்திருப்பர். நா தழுதழுக்கப் பேசுவர்.

(2) காண்பார் "இவர் பித்தரோ?" என்று எண்ணும்படித் தோன்றும் அம் மெய்ப்பாடுகளைக் கீழ்க்காணும் அருட்பாடல்களால் அறியலாம். அவையே இச் சொற்றொடரின் விரிவும் விளக்கமுமாக அமையும்.

மெய்தான் அரும்பி விதிர்விதிர்த்து
உன் விரையார் கழற்கு என்
கைதான் தலைவைத்துக் கண்ணீர்
ததும்பி வெதும்பி உள்ளம்
பொய்தான் தவிர்ந்து உன்னைப் போற்றி
சயசய போற்றி என்னும்
கைதான் நெகிழவிடேன் உடையாய்!
என்னைக் கண்டு கொள்ளே.

— திருவாசகம்.

சிரிப்பார் களிப்பார் தேனிப்பார்
திரண்டு திரண்டு உன் திருவார்த்தை
விரிப்பார் கேட்பார் மெச்சுவார்
வெவ்வேறு இருந்து உன் திருநாமம்

தரிப்பார் பொன்னம் பலத்தாடும்
தலைவா! என்பார் அவர் முன்னே
நரிப்பாய் நாயேன் இருப்பேனோ?
நம்பி இனித்தான் நல்காயே! — திருவாசகம்.

அங்கைகொடு மலர்தூவி அங்கமது புளகிப்ப
அன்பினால் உருகிவிழி நீர்
ஆருக, ஆராத முத்தியினதாவேச
ஆசைக் கடலுள் முழ்கி
சங்கரா! சுயம்புவே! எனவும் மொழி
தழுதழுத்திட வணங்கும்
சன்மார்க்க நெறி — தாயுமானவர்.

உடல் குழைய என்பெலாம் நெக்குருக விழிநீர்கண்
ஊற்றென வெதும்பி ஊற்ற
ஊசி காந்தத்தினைக் கண்டணுகல் போலவே
ஓர் உறவும் உன்னிஉன்னிப்
படபடென நெஞ்சம் பதைத்துள் நடுக்குறப்
பாடி ஆடிக் குதித்துப்
பனிமதி முகத்திலே நிலவனைய புன்னகை
பரப்பி, ஆர்த்தார்த் தெழுந்து
மடலவிழ் மலரனைய கைவிரித்துக் கூப்பி
வானே! அவ்வானில் இன்ப
மழையே மழைத்தாரை வெள்ளமே! நீடுழி
வாழி என வாழ்த்தி ஏத்தும்
கடல்மடை திறந்தனைய அன்பர் அன்புக்கெளியை
கல்நெஞ்சனுக் கெளியையோ?
கருதரிய சிற்சபையில் ஆனந்த நிர்த்தமிடு
கருணாகரக் கடவுளே. — தாயுமானவர்.

ஓம் நமோ நாராயணாய என்(று) உரைத்து உள்ளம் உருகித்
தான் அமைந்(து) இருதடக்கையும் தலைமிசைத் தாங்கி
பூநிறக் கண் புனல் உக மயிர்ப் புறம் பொடிப்ப
ஞான நாயகன் இருந்தனன் அந்தணன் நடுங்க.
— கம்பராமாயணம்.

தொழுவார் வலம் வருவார் துதிப்பார் தம்தொழில் மறந்து
விழுவார் அருமறை மெய்தெளிவார் இன்பமெய் புளகித்து
அழுவார் இன்னும் கண்கண்ணீர் மல்குவார் என்கண் ஆவதென்னே
வழுவாத செஞ்சொற் கலைமங்கைபால் அன்பு வைத்தவரே.
— சரசுவதியந்தாதி.

இலங்கும் திருமுகம் மெய்யிற் புளக மெழும் கண்ணீர்
மலங்கும் பழுதற்ற வாக்கும் வலிக்கும் மனம் மிகவே
துலங்கும் முறுவல் செயக்களி கூரும் சுழல்புனல் போல்
கலங்கும் பொழுது தெளியும் சொல்மானைக் கருதினர்க்கே.

— சரசுவதியந்தாதி.

இ. முன் சொன்ன எல்லாம் தரும் பித்தர் ஆவர் என்றால் அபிராமி சமயம் நன்றே.

(1) மேற்கண்டவாறு மொழி தடுமாறும் அன்பர் உன்னை முன்னிறுத்திச் சொன்னபடி அனைத்தும் நிகழும். உன் நினைப்பால் அவர்கள் பித்தர் போல் ஆனார் எனினும் உன்னை வழிபடும் சாக்த நெறி நன்றே ஆகும்.

(2) அம்பிகை அடியார்கள் அபிராமிபட்டர் போலவும், இராம கிருஷ்ண பரமஹம்சர் போலவும், தம்மை மறந்த நிலையில் பித்தர் போல் ஆகின்றனர். அம்பிகையை முன்னிறுத்து அவர்கள் கூறும் சொற்களின்படி அல்லது அவர்களை முன்னே கருவியாக வைத்து அன்னையே கூறும் சொற்களின்படி அனைத்தும் நிகழுகின்றன. எடுத்துக்காட்டாக மன்னர் முன்கூறியபடி அமாவாசை பௌர்ணமி ஆயிற்று. வாக்கு பலிதமாகும் சிறப்பெய்தும் வகையில் பித்தரே ஆனாலும் அபிராமியை வழிபடும் நெறி நன்றே ஆகும்.

(3) மனிதர் அனைவருக்கும் ஏதாவதொன்றின் மீது 'பித்து' இருக்கும். அது கடவுளிடம் அமைதல் நன்று என இராமகிருஷ்ணர் கூறியபடியே பட்டரும் புகன்றார். எனவே 'நன்றே' என்றது எள்ளற் பொருளினைத் தராது.

(4) அடியார்கள்,அம்பிகை வடிவே ஆகித் ''தனம் தரும்......'' முதலான பாடல்களில் முன்சொன்ன நல்லன எல்லாம் தரும் பித்தர் ஆவார்கள். அதனாலும் அபிராமி சமயம் நன்று.

அபிராமி சமயம் என்பது அம்பிகையை வழிபடும் சாக்த சமயம். முன்னரே கண்டபடி தமிழ் நாட்டில் அது சைவத்துள் அடக்கம்.

கூறியது நடக்கும் (வாக்பலிதம்) ஆற்றல் எய்துதலே இப் பாடலின் பாராயண பலன் ஆகும்.

(தொடரும்)

மேலை நாட்டுத் தத்துவ மேதைகள்
(Western Philosophers)

சுவாமி வீரபாகு

(மலர் 47. இதழ் 4, பக்கம் 197 இன் தொடர்ச்சி.)

2. பிளேட்டோ (Plato) - தொடர்ச்சி (6)

(கி. மு. 427-347)

இருவேறு உலகங்கள் :

"உலகத்து இயற்கை, இருவேறு வகைப்பட உள்ளது. செல்வம் உடையவராகிச் சுக துக்கங்களை அனுபவிப்பதுஒருவகை. பிறிதொரு வகை, தெளிந்த ஞானமுடையவராகத் திகழ்ந்து நிற்பது".

" இருவேறுலகத்து இயற்கை திருவேறு
தெள்ளிய ராதலும் வேறு "

எனத் திருவள்ளுவர் குறிப்பிடுகின்றார்.

2500 ஆண்டுகட்கு முன்னர் வாழ்ந்த சிந்தனைச் செல்வர் பிளேட்டோ இருவகைப்பட்ட உலகங்கள் நிலவுவதைத் தம் நூலில் பேசுகிறார்.

"காணப்படும் இந்த உலகிற்கு மேலான எதிரிடையான ஓர் உலகம் உண்டு. நம் உலகோ மாறுபாட்டிற்கும் குழப்பத்திற்கும் உட்பட்டது. இஃதன்றி வேறோர் உலகு இருத்தல் வேண்டும். அதுவோ கருத்துக்கள் உலகு; சிந்தனைகள் உலகு; உறுதியான நிலை கொண்ட உலகு... இப்பிரபஞ்சம் இங்ஙனம் இரு பகுதிகளாகப் பிரிந்து இலங்குகின்றன. ("Over against the world of perception, there must be another realm. This is the realm of Ideas, of concepts, of true and abiding existence. The universe has fallen apart into two sections").

இவ்வுலகம் உண்மை அன்று – பிரதியே :

இப்பிரபஞ்சம் பற்றி முன்னர் எவரும் கூறிய கோட்பாடுகள், தத்துவங்கள் பிளேட்டோவிற்குச் திருப்தி தரவில்லை. நாம் பார்த்து, தொட்டு, புலன்களால் அனுபவிக்கும் இவ்வுலகம் உண்மையான தன்று; இஃது ஒரு பிரதி உலகமே (reflection) எனப் பிளேட்டோ கருதுகிறார். நம் உலகில் காணும் ஒவ்வொன்றும் மாறுபாட்டிற்கு உட்பட்டவை; வருவதும் போவதுமாக உள்ளன; அதற்கு ஓர் எல்லையுமில்லை. இவ்வுலகில் பற்பல குறைகள் உள்ளன; ஒழுங்கீனங்கள் நிறைந்துள்ளன. கேடுகள் மிகுந்துள்ளன. இது நிலவுகிறது. நாம் இதனை அனுபவபூர்வமாகத் தினந்தோறும் காண்கிறோம். அவ்வளவுதான். ஆனால் இது நிஜமானதல்ல.

"கருத்துக்கள் உலகம்" (The World of Ideas) :

எனினும் உண்மையானதோர் உலகம் உண்டு. அங்கே உண்மைப் பொருள்களே உள்ளன. நாம் அனுபவபூர்வமாகப் பார்க்கும் உலகப் பொருட்கள் வெறும் பிரதிகளே (mere copies). பிளேட்டோ தாம் புலப்படுத்தும் உலகைக் "கருத்துக்கள் உலகம்" (The World of Ideas) எனப் பேசுகிறார். இக்கோட்பாடே "வடிவங்கள்" உலகம் அல்லது "இலட்சிய உலகம்" (The world of "Forms" or the world of Idealism) எனவும் விளங்குவதுண்டு. இக்கருத்துக்கள் உலகிலே இலட்சிய மரத்தினைக் காணலாம். நம் உலகிலே காணும் மரங்கள் இலட்சிய மரத்தின் வெறும் பிரதிகளே. அந்த உலகிலே இலட்சிய இல்லங்களைப் பார்க்கலாம். இப் பிரபஞ்சத்தில் காணப்பெறும் மற்ற மற்றப் பொருள்களின் உண்மையான கருத்துக்கள் - வடிவங்களையும் அங்குக் காணலாம். அவைகள் பூரணத்துவம் வாய்ந்தவை; எவ்வகையிலும் அவை மாறுபாடு அடைவதில்லை; அவை மறைவதுமில்லை; மாய்வதும் இல்லை. அவை என்றும் இருப்பனவாகும். (These are perfect, do not change in any way, never fade or die; but remain for ever.)

அழிவற்ற மாதிரிகள் :

"கருத்துக்களை" (Ideas) பிளேட்டோ "வடிவங்கள்" (forms) என்றும் வழங்குவதுண்டு. கருத்துக்கள் புதிதாகச் சிருட்டிக்கப் பட்டவை அல்ல; அவை ஆரம்ப காலத்திலிருந்தே இருந்தவை. ஆக்கப்பட்ட காலத்திலிருந்தே என்றும் அவை நிறைவுநிலை (Perfect State) யிலே நின்று இலங்குவன. அவை உலகப் பொருட் கட்கு அப்பாற்பட்டவை. இந்த உலகில் ஏற்படும எவ்வித மாற்றங்

களும் அவற்றைப் பாதிப்பது இல்லை. இவ்வுலகில் நாம் புலன் வழி அனுபவிக்கும் எவ்வித அனுபவமும் அவற்றை மாறுபாடுறச் செய்வதில்லை. அவைகள் யாவும் அழிவற்ற மாதிரிகள் (eternal petterns) என்ற மாட்சிக்கு உரியன. நாம் அனுபவிக்கும்அத்தனைப் பொருள்களும் அந்த "அழிவற்ற மாதிரிகளின்" பிம்பங்களே ஆகும். அந்த "இலட்சிய உலகில்" (Ideal World) எல்லாக் கருத்துக்களும் நிரல்பட ஒழுங்காய்நின்று இலங்குவன. அவ்வுலகில் மிக மிக உயர்ந்த கருத்து (The highest idea)-நிறைவு பொருந்திய நன்மைக்கருத்து (The idea of perfect goodness)-மேல்நிலைபெற்று மிளர்ந்து நிற்கும்.

சிற்பியின் கருத்தும் சிலையும் போல்

பொருள் வடிவான இப்பிரபஞ்சத்தில் பிறிதொரு கோட்பாடு உண்டு - இங்குக் காணப்படும் இவைகள்யாவும் கருத்துக்கள் வகையைச் சார்ந்தவை அல்ல - இவைகளைக் கருத்துக்கள் பதிவு செய்யப் பெறும் கச்சாப் பொருளாகக் கருதலாம். (It may be thought of as raw material upon which the "Ideas" are impressed).

ஓர் உதாரணத்தைப் பார்ப்போம். சிற்பி ஒருவன் ஓர் உருவத்தைக் கருத்தில் அமைக்கிருன். அவன் ஒரு சலவைக் கல்லிலே (marble stone), தான் கருத்தில்கொண்ட உருவத்தினைப் பிரதிபலிக்கச் செய்ய விழைகிருன். அவன் கொண்ட கருத்துவேறு-தேர்ந்து எடுக்கப்படும் சலவைக்கல்லாகிய பொருள் வேறு. இவை யிரண்டும் தனித் தனியாகச் சுதந்திரமானவை. சிற்பி கொண்ட கருத்தைப் பிரதிபலிக்கச் சலவைக்கல் அவசியமாகிறது. அப்போது தான் சிற்பியின் கருத்தைக் சீரிய முறையில் செலுத்தி, பிறர் புலன் கொண்டு அனுபவித்துப் பூரிப்பு அடைய முடியும். எனவே சலவைக் கல் சிற்பியின் கருத்தைச் செலுத்த ஓர் உன்னத சாதனமாக - கச்சாப் பொருளாகப் பயன்படுகிறது. இப்படிச்சிற்பி தான், எத்தனைச் சிலைகளை வேண்டுமானாலும் வடிவு அமைத்து வழங்கலாம். ஆனால் சிற்பியின் கருத்து எவ்வகையிலும் களங்கமுறுது - கடுகளவும் பாதிக்கப்படமாட்டாது. அஃது அப்படியே இருக்கும்.

தோன்றும் உலகம் தோன்றிய விதம் :

இம்முறையில் தான் இந்த உலகம் தோற்றுவிக்கப்பட்டது என்பது பிளேட்டோவின் கருத்து. புலன்கள் மூலம் நாம் அனுபவிப்பவை அத்தனையும் கருத்துக்கள் உலகம், பொருள்மேல் ஊடுருவி ஏற்படுத்திய வினையின் பயனுல் உண்டாகிய செயல் -

இஃதே இயற்கை எனஇயம்பப்படுகிறது. இயற்கை கருத்துலகிற்குப் பெரிதும் கடப்பாடு உடையது ("Nature - all that we experience through our senses-owes its existence to the influence of the world of ideas upon matter") ஆனால் இஃது "உண்மையான" உலகு அன்று. "உண்மை" உலகு "பொருள்" மேல் செலுத்திய தொரு பதிவே ஆகும். ஆகையால் பலப் பல குற்றங்கள்; பலப் பல மாறுபாடுகள்; புலனுறு உலகில் பலப் பல குறைபாடுகள் காணப் படுகின்றன. இதற்குக் காரணம் பொருளே (matter) தவிர கருத்துக்கள் (ideas) காரணம் ஆக மாட்டா. ("Thus all the mistakes, all the changes, all the imperfections of the world of our senses are due to matter and not due to the ideas".)

''டமியர்ஜ்'' என்ற படைப்புக் கடவுள் :

பிளேட்டோவின் ''உரையாடல்களில்'' புகழ் பெற்ற ஒன்று டைமீஸ் (Timaeus). அந்நூலில் நம் புலன்கள் உலகம் எப்படி ஆக்கப்பட்டது என்பதை அவர் அழகுபட விரித்துரைக்கிறார். ஒரு படைப்புச்சிற்பி உண்டு - அவரது பெயர் ''டமியர்ஜ்'' (Demiurge). அவர் படைப்புக் கடவுளாகவே கருதப்படுபவர். அக்கடவுள் தான் கருத்துலகத்தையும் பொருளையும் இணைத்து இவ்வுலகினைப் படைத் தார். ஒரு சிற்பி தனது கருத்தைச் சலவைக் கல்லிலே பிரதிபலிக்கச் செய்து, ஒரு சிலையை ஆக்குவது போன்றது இவ்வுலகப்படைப்பு. ''டமியர்ஜ்'' (Demiurge) ஒவ்வொன்றைப் பற்றியும் உயர்வுமிக்க தெளிவான கருத்து உடையவர். பொருள் வடிவான கச்சாப் பொருளும் அவர் கைவசம் உண்டு. பிளேட்டோவின் ''டமியர்ஜ்'' கருத்துக்கள், பொருள் ஆகியவை எப்படி வந்தன என்பது பற்றி பிளேட்டோ ஏதும் கூறவில்லை. (சைவசித்தாந்தம் மாயையாகிய பாசப் பொருளைக் கொண்டு தனு - கரண - புவன - போகங்களை யாக்கி, பசுவாகிய ஆன்மாக்களுக்கு, பதியாகிய சிவபெருமான் வழங்கி, அவை இருள் நிலையிலிருந்து அருள்நிலை எய்த உதவுவ தாகப் புலப்படுத்தும் கோட்பாடு ஈண்டுக் கருதற்பாலது. மாயை சிவனால் தோற்றுவிக்கப்படவில்லை; இறைவன் மாயையைக் கொண்டு கருவி கரணங்களைக் கருணையால் உயிர்கட்கு வழங்கினான் என்பது சித்தாந்தம்.)

பொருள்கள் தொடக்கத்திலேயே இருந்தன; அவ்வுளவுதான். ''டமியர்ஜ்'' எனப் பேசப்படும் கடவுள் ஒரு பொருள் (matter) மீது ஒரு கருத்தை (idea) ஏற்றித் தொடர்புபடுத்துகிறார். உடனே அப்பொருள் தோற்றுவிக்கப்படுகிறது. உண்மையில் ஒருகருத்தினால் பற்பல பொருள்களும் உற்பத்தி ஆகின்றன. ஓர் ஆலமரத்தைப்

பற்றி ஒரு நிறைவு பொருந்திய கருத்து இருக்கிறது. ஆனால் பல்லாயிரக்கணக்கான ஆலமரங்கள் பாரில் தோன்றி நிலவுகின்றன. அப்படியே தான் இப்பிரபஞ்சத்திலுள்ள ஒவ்வொரு பொருளுமே. காணப்படும் ஒவ்வொன்றும், ஒரு நிறைவு பொருந்திய கருத்தும் (idea) பொருளும் (matter) இணைந்த வடிவமே ஆகும். எத்தனைப் பொருள்கள் உலகில் உண்டான போதும், அதற்கு மூலமாகிய கருத்தானது கடுகளவும் பாதிக்கப் படுவதில்லை. அஃது எப்பொழுதும் நிறைவுஉள்ளதாக (perfect)வும் மாறுபாடு (Unchange) இல்லதாகவும் இலங்கி நிற்கும். நமக்கு ஒன்று நிச்சயமாகவும் நன்றாகவும் விளங்குகிறது. பிளேட்டோ ஆணித்தரமாக நம்புவது யாதெனில், இப்பிரபஞ்சம் இருவேறு உலகங்களாக உள்ளது என்றும், நிறைவு பொருந்திய, நிச்சயம் மாறாத கருத்துலகு ஒன்று உண்டெனவும், பொருள் உலகு ஒன்று உண்டென்றும் திடமாகக் கருதுகிறார். பிளேட்டோ சீர்தூக்கிச் சிந்தித்துத் தெரிவிப்பதாவது: கருத்துக்கள் உலகு தான் உண்மையானது, மெய்யானது. நாம் புலன் வழி அனுபவித்து வரும் இவ் வுலகம் ஒரு நகல் உலகமாகும் (a copy world); இவ்வுலகு பொய்யான உலகு (unreal world) ஆகும். ஏற்கனவே குறிப்பிடப் பட்டதுபோல, இஃது ஒரு மாறுபட்ட உலகம் – பொருள் (matter) மேலே ஒரு நிறைவு பொருந்திய கருத்தை (a perfect idea)ப் பதிவு படுத்தப்பட்ட ஒன்றே ஆகும். இத்தகைய எல்லாவிதமான நிறை வற்ற தன்மைகட்கும் (imperfections) காரணம் யாது? பொருளின் மேலே கருத்தை நிறைவற்ற முறையில் தான் பதிவு செலுத்த முடியும். நிறைவுடன் பதிவு செய்வது நிச்சயம் முடியாததொரு காரியம் ஆகும். பொருள் (matter) நிறைவற்ற ஒன்றாகும். எனவே கருத்தை அஃது ஓரளவு பாதிக்கவே செய்கிறது. அதனுடைய வடிவத்தையும் மாற்றி விடுகிறது. (Matter is imperfect and thus distorts the idea to some extent, twists it out of shape).

இருவேறு உலகங்களின் தன்மையையும் இனிது கண்டறிய, சென்ற கட்டுரையில் எடுத்தியம்பிய குகை உருவகக் கதையோடு (The Allegory of the CAVE) ஒப்பிட்டுப் பார்த்தால் பிளேட்டோவின் கோட்பாடு பின்னும் சிறப்பாக நமக்கு விளங்கக் கூடும்.

ஆதார நூல்கள் :

Basic Teachings of Great Philosophers by S. E. Frost
A History of Western Philosophers by Bertrand Russell.

(தொடரும்)

கட்டுரை எண். 4.

போதமும் சித்தியும்

டாக்டர் திரு. மு. சிவச்சந்திரன்

அவையடக்கம் :

சிவஞானபோத ஆசிரியர் மெய்கண்டார், அவையடக்கம் கூறும் பாடலில் குறிப்பாகப் பிற சமயங்களை ஒராற்ருன் மறுத்துக் கூறினர் என்பது முன்னர்ச்சிந்திக்கப்பெற்றது. சித்தியார் ஆசிரியர் அவையடக்கம் கூறும் பாடலில் கருத்துக்களை இயல்பாகவே விளக்கியுள்ளார். மறைகளினலும், நான்முகனலும், திருமாலினலும், மனம்மொழிகளினலும், வேறு அவ்வகைப் பிரமாணங்களாலும் அறியப்படாத இறைவனது இயல்பினை யான் சொல்லப்புகும் ஆசையானது சான்ருேர்களுக்கு நகைப்பினை உண்டுபண்ணும் என்று கூறுகின்ருர்.

"மறையினல் அயனல் மாலால் மனத்தினல் வாக்கால் மற்றும்
குறைவிலா அளவி னலும் கூறெணு தாகி நின்ற
இறைவனர் கமலபாதம் இன்று யான் இயம்பும் ஆசை
நிறையினர் குணத்தோர்க்கெல்லாம் நகையினை நிறுத்துமன்றே"

என்பது மேற்சொன்ன கருத்துக்கள் அமைந்த பாடலாம்.

சில படிநிலைகள் :

சித்தியார் ஆசிரியர், மெய்ந்நூல் கருத்துக்களை ஆசைபற்றி அறைவது நகையினை நிறுத்தும் என்று கூறினலும், இக்கருத்துக் களைச் சில படிநிலைகளில் உணர்வது சாத்தியப்படும் என்று இயம்பு கின்ருர். இறைவன் இயல்பினையும், அவனருள் வழிப்பட்ட பொருள்களின் தன்மைகளையும், உயிரின் விளக்கத்தினையும் அறிவதும் உணர்வதும் அரியது எனினும் சிவ நூல்களுள் கூறிய உண்மைகளை அனுபவ நிலையில் அறிந்த ஆசிரியர் அருளிச்செய்யும் உபதேசத்தால் கேட்டு அறியலாம்என்றும், அதற்குத்துணைசெய்யும் அளவைகளால் சிந்தித்தும் அறியலாம் என்றும், அங்ஙனம் சிந்தித்ததனைச் சிவஞானத்தால் மாசறத் தெளிந்தும் அறியலாம் என்றும், அதனல் பாசநீக்கம் எய்தி நிட்டைகூடிச் சிவானுபூதியும் பெறலாம் என்றும் கூறுகின்ருர். இக்கருத்துக்களை,

" அருளினுல் ஆகமத்தே அறியலாம் அளவினுலும்
தெருளலாம் சிவனை ஞானச் செய்தியாற் சிந்தையுள்ளே
மருளெலாம் நீங்கக் கண்டு வாழலாம் பிறவி மாயா
இருளெலாம் இரிக்கலாகும் அடியரோ டிருக்கலாமே."

என்னும் பாடலால் விளக்குகின்ருர்.

அளவை அறிமுகம் :

சிவஞானபோதம் முதலான பதினன்கு சாத்திர நூல்களில் முப்பொருள் உண்மைகள் பொதுவாகக் கூறப்பட்டிருப்பினும், அவை தொடர்பான சிறப்புச்செய்திகள் சிலவற்றைத் தனித்தனியே ஒவ்வொரு நூலும் எடுத்தியம்புகின்றன. அவற்றுள் உண்மை விளக்கம் ஆன்ம தத்துவம் இருபத்திஞன்கு பற்றிய கருத்துக்களைத் தனியே எடுத்துச் சிறப்பாகக் கூறுகின்றது. அதுபோலச் சிவஞான சித்தியார், அளவைகள் பற்றித் தனித்து விளக்கமாகக்கூறுகின்றது.

பொருள்களின் உண்மைகளினையும், அவற்றின் தன்மையினையும், அறிதலுக்குக் கருவிகளாக உள்ளனவற்றை அளவை என்று கூறுவர். அளந்து அறிதற்குத் துணை செய்வது ஆதலின் இது அளவை எனப்பட்டது. இதனை வடமொழியில் பிரமாணம் என்று கூறுவர். இவ்வளவை, காண்டல், கருதல், உரை, இன்மை, குறிப்பு, உவமை, ஒழிபு, நிகழ்ச்சி, ஐதிகம், இயல்பு எனப் பத்து ஆகும். இவையனைத்தும் காண்டல், கருதல், உரை எனும் மூன்றில் அடங்கி விடும். இன்மையும் இயல்பும் காட்சியில் அடங்கும். குறிப்பு, உவமை, ஒழிபு, நிகழ்ச்சி எனும் நான்கும் கருதலில் அடங்கும். ஐதிகம் உரையில் அடங்கும். இவற்றை வடநூலார் அனுபவம், யுக்தி, சுருதி எனக் கூறுவர். இவற்றைச் சித்தியார்,

'' அளவை காண்டல் கருதல் உரை அபாவம் பொருளொப்பா
[றென்பர்
அளவை மேலும் ஒழிபுண்மை ஐதி கத்தோ டியல்பெனநான்
களவை காண்பர் அவையிற்றின் மேலும் அறைவர்
[அவையெல்லாம்
அளவை காண்டல் கருதல் உரை யென்றிம் மூன்றின்
[அடங்கிடுமே ''

என்னும் பாடலில் கூறுகின்றது.

மூவகை அளவைகள் :

காண்டல் என்பது, ஐயம் திரிபறப் பொருள்களை நேரே அறிவ தாகிய உயிரனது அறிவாற்றலாகும். கருதல் என்பது, நேரே

அறியப்படாமல் மறைந்து நின்ற பொருளை அதனைவிட்டு நீங்காது எப்போதும் உடனிகழும் ஏதுவைக் கொண்டு அறியும் உயிரின் அறிவாற்றலாகும். உரையளவை யாவது, அருளாளர்களின் சொற்களில் வைத்து அறியும் உயிரின் அறிவாற்றலாகும்.

" மாசறு காட்சி ஐயந் திரிவின்றி விகற்ப முன்னு
ஆசற வறிவ தாகும் அனுமானம் அவினு பாவம்
பேசுறும் ஏதுக் கொண்டு மறைபொருள் பெறுவ தாகும்
காசறு முரையில் மானக் தடங்கிடாப் பொருளைக் காட்டும் "

என்னும் பாடலால் மேற்கூறிய கருத்துக்களை ஆசிரியர்கூறுகின்றார்.

நால்வகைக் காட்சி :

இதுவரை அருணந்திசிவம் மூவகை அளவைகள் பற்றிக் கூறினர். இனி காட்சி என்பது நால்வகைப்படும் என்று கூறு கின்றார். (1) நிருவிகற்பக்காட்சி - அதாவது வேறுபாடின்றிக் காண்பது. (2) சவிகற்பக்காட்சி - அதாவது வேறுபாட்டோடு அறிவது, (3) ஐயக்காட்சி, (4) விபரீதக்காட்சி என்பன அவை.

ஒருபொருளைப் பொதுவகையாகக் காணும் ஆன்ம சிற்சத்தி நிருவிகற்ப காட்சியாம். பெயர் முதலிய வேறுபாடுகளோடு அறியும் ஆன்மசிற்சத்தி சவிகற்பக்காட்சியாம். ஒருபொருளை இன்னது என்று துணியாது ஆராயும் ஆன்மசிற்சத்தி ஐயக்காட்சி யாம். ஒன்றை மற்றொன்றாகக் கருதும் ஆன்ம சிற்சத்தி விபரீதக் காட்சியாம். இக்கருத்துக்களை,

" கண்ட பொருளை யிரட்டுறவே கருத லையம் திரியவே
கொண்டல்திரிவாம் பெயர்சாதி குணமே கன்மம் [பொருளெனவைந்
துண்டவிகற்ப வுணர்வினுக்குப் பொருளினுண்மை மாத்திரத்தின்
விண்டலில்லா வறிவாகும் விகற்ப மில்லாக் காட்சியே "

என்னும் பாடல் விளக்குகின்றது.

பிரமாணமும் பிரமேயமும் :

இனி ஆசிரியர் அருணந்திசிவம் மூன்று அளவைகளின் பாகு பாடுகளைத் தனித்தனியே விளக்குகின்றார். காட்சியளவை என்பது இந்திரியக்காட்சி, மானதக்காட்சி, தன்வேதனைக் காட்சி, யோகக் காட்சி என நான்கு வகைப்படும் என்றும், கருதல்அளவை என்பது தன்பொருட்டுக் கருதல், பிறர்பொருட்டுக் கருதல் என இரண்டு

வகைப்படும் என்றும், உரையளவையாவது தந்திரக்கலை, மந்திரக் கலை, உபதேசக்கலை என மூன்று வகைப்படும் என்றும் கூறுகின்றார். இவ்வளவைகளால் அறிந்து அறியப்படும் பொருள்கள் பொது, சிறப்பு என இரண்டுவகைப்படும் என்றும் இயம்புகின்றார். பொருள் களைப் பிரமேயங்கள் என்பர். இக்கருத்துக்களை,

" காண்டல் வாயின் மனந்தன்வே தனையோடியோகக் காட்சியென
ஈண்டு நான்கா மநுமானந் தனக்கும் பிறர்க்கு மென்றிரண்டாம்
மாண்ட அரைதந் த்ரமந்திரத்தோ டுபதே சச்சொலென மூன்றும்
பூண்டவளவைக் கெதிர்புலன்றன் னியல்பு பொது
[வென்றிரண்டாமே "

என்னும் பாடலால் விளக்குகின்றார்.

(தொடரும்)

கடிதம்

டி. வி. வெங்கட்ராமன், இ. ஆ. ப.

தலைவர் மற்றும் நிர்வாக இயக்குநர்,

தமிழ்நாடு தொழில்
முதலீட்டுக் கழகம்,
"அருள் மனை"
27, ஒயிட்ஸ் சாலை,
சென்னை 600 020,
31—3—88

ஸ்ரீலஸ்ரீ குருமகாசந்நிதானம் அவர்களுக்கு,

அன்பு கலந்த வணக்கங்கள். சென்ற வெள்ளிக்கிழமை 25—3—88 இல் தஞ்சைப் பல்கலைக்கழகத்தின் ஆதரவில் நடைபெற்ற " திருமறைகளும் சைவ சமயமும் " என்பது பற்றிய கருத்தரங்கில் கலந்துகொண்டு சற்றேறக்குறைய மூன்றரை மணி நேரம் தாங்கள் கருத்துச் செறிந்த ஓர் சொற்பொழிவு ஆற்றியதைப் பற்றி அங்கிருந்த அனைவரும் எனக்கு எடுத்துக் கூறினார்கள். அன்பும், ஆன்மீகமும், அறிவும், இறை உணர்வும் மிக நிரம்பியுள்ள தங்களது உள்ளத்திலிருந்து வெளிவந்த உணர்வுகள் எத்தன்மை வாய்ந்தவை என்பது பற்றி என்னால் ஊகிக்க முடிகிறது. அந்த அரிய நிகழ்ச்சியின்போது நான் இல்லாதது குறித்து மிக வருந்துகின்றேன். எனினும் முனைவர் கந்தசாமி அவர்களைத் தங்களுடைய சொற்பொழிவு கேசட் பதிவு ஒன்றை எடுத்து எனக்கு அனுப்பி வைக்குமாறு கேட்டுக் கொண்டுள்ளேன். அதை ஒரு பெரிய பொக்கிஷமாக வைத்துப் போற்றுவேன்.

கல்வி யுகத்திற்குத் தமிழ் (2)

டாக்டர் திரு. வா. செ. குழந்தைசாமி
துணைவேந்தர், அண்ணா பல்கலைக் கழகம்.

(மலர் 47, இதழ் 4, பக்கம் 184 இன் தொடர்ச்சி)

(இக்கட்டுரை, துணைவேந்தர் டாக்டர் திரு. வா. செ. குழந்தைசாமி அவர்கள் கோலாலம்பூரில் நடந்த ஆறாவது உலகத் தமிழ் மாநாட்டில் ஆற்றிய உரையாகும். இக்கட்டுரையில் தமிழில் அறிவியல் இயக்கம், கலைச் சொல்லாக்கம், எழுத்துச் சீரமைப்பு முதலிய துறைகளில் ஆசிரியர் வழிகாட்டுகிறார். இக்கட்டுரைத் தொடர் "தினமணி" நாளிதழில் வெளிவந்தது. கட்டுரையின் இறுதிப் பகுதி இது. நன்றி: தினமணி.)

எழுத்துச் சீரமைப்பு : (தொடர்ச்சி)

பண்டைக் காலத்தில் கல்வி ஒரு சிலர், அதுவும் மிகச் சிலர் மட்டுமே பெறும் ஒன்றாக இருந்தது. ஆனால், அனைவரும் கல்வி பெறவேண்டும் (Universal education) என்ற தத்துவம் செயற் படுத்தப்படும் இந்த நூற்றாண்டில் எழுத்துக்களைக் கற்பதற்கே ஒவ்வொரு ஆணும் பெண்ணும் நீண்ட காலத்தைத் தலைமுறை தலைமுறையாகச் செலவிட நேர்ந்தால் அது மிகுந்த விரயமாகும். அது தவிர்க்க முடியாதது எனின் ஏற்கவேண்டியதுதான். தவிர்க்க முடியுமெனின், அதைச் செய்யத் தயங்குவதற்கு நியாயமே இல்லை.

மானிட வாழ்வு ஊனாலும், பொருளாலும் ஆனதன்று. அது காலத்தால் ஆனது. மனித சமுதாயத்தின் ஈடு இணை இல்லாத செல்வம் காலம். அதை விரயமாக்கும் இனம், விரயமாக்கும் வகையில், அமைப்புக்களை வளர்த்துக்கொள்ளும் இனம் வளர்ச்சிப் பயணத்தில் பின் தங்க நேரிடும்.

தமிழில் 247 ஒலியெழுத்துகளையும் ஒன்று குறையாமல் எழுத ஏறத்தாழ 39 குறியீடுகள் போதுமெனின், நாம் ஏன் 131 அல்லது 124 குறியீடுகள் எனும் சுமையை ஏற்கவேண்டும்? 39 குறியீடுகளைக் கற்பது எளிது. கற்கும் இளைஞர்களின் சுமைகுறையும். கால விரயம் தவிர்க்கப்படும். தட்டச்சில் பயன்படுத்துவது எளிது. கணிப் பொறியில் தமிழ் இடம் பெறுவது எளிது. ஒரே தட்டச்சில் (Type-writer), ஒரே தொலை எழுதியில் (Telex) தமிழ் எழுத்துகள்,

ரோமன் எழுத்துகள் இரண்டையும் பயன்படுத்தலாம். உலகு முழுவதும் வாழும் தமிழர்கள், ஆங்கிலத்தட்டச்சை வாங்குவதற்குப் பதிலாக இருமொழித் தட்டச்சை வாங்கினால் அதுபோலவே இருமொழித் தொலை எழுதி (Telex) உருவானால், பலதுறைகளிலும், உலகின் பல பகுதிகளிலும் தமிழ் பயன்படுவது எளிதாகும். விரிவு படுத்தப்படும்.

தமிழினம் இன்று ''வடவேங்கடம் தென்குமரி ஆயிடைத் தமிழ் கூறும் நல்லுலகம்'' என்ற அளவில் மட்டும் நிற்கவில்லை. தமிழினம், உலகு தழுவி வாழ்கிறது. தமிழர் ஒரு மொழியினர்; பல நாட்டினர், எல்லா நாட்டிலும் சிறுபான்மையினர். பல இடங்களில், பல சூழ்நிலைகளில் அவர்கள் தம் மொழியோடு, தம் கலையோடு, தம் இலக்கியத்தோடு தொடர்பு வைத்துக்கொள்ள இயலாத சூழ்நிலை நாளுக்கு நாள் வளர்ந்து கொண்டே போகிறது. இந்த நிலையில் ரோமன் வரிவடிவத்தைத் தேவைக்கேற்பத் துணை வரிவடிவமாகப் பயன்படுத்த நாம் சமைவாக வேண்டும். நமக்கு இதில் மலேசியா வழிகாட்டுகிறது. இந்தோனேசியா வழிகாட்டுகிறது. அவர்கள் அனுபவம் நமக்குத் துணைபுரியும். முழுமையும் ஒரு அன்னிய வரிவடிவத்தை ஏற்றுக்கொண்ட இந்த நாட்டின் மொழி வளர்ந்திருக்கிறது. அழிந்துவிடவில்லை. நாகரிகம், பண்பாடு நசிந்து விடவில்லை.

பார்வை மாறவேண்டும் :

இரண்டாயிரம் ஆண்டுகட்கு முன்பு தமிழினம் இயல், இசை, நாடகம் என்ற முத்தமிழ் கண்டது. சங்க காலம் தாண்டிய காலப் பகுதி முழுவதுமே தமிழுக்குத் தேக்கம் தான். இன்று நாம் நீண்ட காலத் தேக்கத்தை ஈடுசெய்து, நாம் உறங்கிவிட்ட காலப்பகுதியில் ஏற்பட்ட முன்னேற்றங்கள் அனைத்தையும் தமிழிற் காண விழைகிறோம். இது மகத்தான பணி. மகத்தான சாதனைகள் புரிய நாம் மகத்தான மாற்றங்களையும் செய்யச் சமைவாகவேண்டும்.

வளர்ந்த உலகம் எங்கோ இருக்கிறது. அது என்றுமில்லாத வேகத்தில் முன்னேறிக் கொண்டு இருக்கிறது. நாம் எங்கோ இருக்கிறோம். எங்கிருக்கிறோம் என்பதைக்கூட அறியாது, எங்கு செல்லவேண்டுமென்பதும் தெரியாது, ஏதோபேசி, கவைக்குதவாத, காலத்திற்கேற்காத வாதங்களில் நேரத்தைச் செலவிட்டு, நாளுக்கு நாள் பின்னடைந்து நிற்கிறோம்.

நமது பொருளாதாரந்தான் வறியது என்பதில்லை. நமது கனவுகள் வறியவை. நமது ஆசைகள்கூடப் பெரியவையாக இல்லை. நமது பார்வை மாறவேண்டும்; பாதை மாறவேண்டும்; நமது அணுகுமுறை ஆக்கமுடையதாக அமையவேண்டும்.

தண்டியடிகள்

வித்துவான் திரு. கா. ம. கண்ணப்பன் எம்.ஏ.,பி.எட்.,

[தருமை ஆதீனம் ஸ்ரீலஸ்ரீ குருமகாசந்நிதானத்தில் 6—3—1988 ஆங்கிலமாத முதல் ஞாயிறன்று வழங்கிய அருளுபதேசத்தையொட்டி எழுதப்பெற்ற கட்டுரை.]

தருமை ஒரு புண்ணிய பூமி! தருமன் பூசித்துப் பேறுபெற்ற தலம் மட்டும் அன்று அது! தருமம் – சிவதருமம் வளர்க்கும் சீரும் இதற்கு உண்டு! வழிவழி வந்த அருட்குரவர்கள் சைவமும் தமிழும் வளர்த்துச் சிவஞானச் செந்நெறி புகட்டி உலகுக்கு நன்னெறி காட்டிய வரலாறுகள் இதன் சரித்திரச் சுவடியின் முந்தைய இனிய பக்கங்கள்! இன்றைய பக்கம் எழில் மிக்கது! நன்னெறிப் பாதை காட்டும் நலம் மிக்கது! திருமுறைகள், சாத்திரங்கள் இன்றைய பக்கங்களின் போதனைகள்! விளக்கம் அருளி வியத்தகு மறுமலர்ச்சியை உண்டாக்கி வருவது இதன் சாதனை! – இங்ஙனம் தருமை ஆதீனத் தவநெறிச் சால்பை எண்ணியவாறே திருமடம் அடைந்தேன்.

காலை மணி 10. ஸ்ரீலஸ்ரீ குருமணிகள் ஸ்ரீ சொக்கநாதர் பூசை நிறைவித்து எழுந்தருளித் திருமுறைப் பாராயணமும் ஆயிற்று. அன்பர்கள் பண்டாரக்கட்டினுட் சென்று வணங்கித் திருநீறு பெற்று அமர்ந்தனர். திருமுறைப் பண்ணிசையும் நாமாவளி ஓதலும் ஆயிற்று. ஸ்ரீலஸ்ரீ குருமகாசந்நிதானத்தில் குருத்தோத்திரம் புரிந்தார்கள்; தண்டியடிகள் நாயனார் புராணம் அருளத் தொடங்கினார்கள்.

சுந்தரர் திருத்தொண்டத் தொகையில் "நாட்டமிகு தண்டி" என இவரைக் குறித்தார். பிறவிக் குருடராகிய இவர் புறக்கண் பார்வை அற்றவராயினும் அகக்கண் நாட்டம் மிக்கவர், இறையருள் புறநாட்டத்தையும் பின்னர் அளித்தது. திருவாரூரில் பிறந்தவர். குளத்திலும், கரையிலும் தண்டு ஊன்றி அதில் கயிறு கட்டித் திருக்குளத்தில் திருப்பணி செய்தவர். ஆதலால் தண்டி எனப் பெற்றார். மானசீக வழிபாடு செய்து இறையருள் பெற்றவர் எனப் புராண உபதேசம் தொடங்கினார்கள்.

தண்டியடிகள் திருவாரூரில் அவதரித்தவர். திருவாரூர்த் தியாகேசப்பெருமான் திருவடிகளைத் துதித்து வழிபடும் பான்மையினர். திருவாரூர்ப் பூங்கோயிலில் அமைந்த தேவாசிரிய மண்டபத்தினை வணங்கும் நியமம் பூண்டவர்; திருஐந்தெழுத்து

ஓதும் செந்நாவும் செம்மனமும் உடையவர் - இவ்வாறு நாயனர் தம் வழிபாட்டு நெறியினை விளக்கி அவர் அவதரித்த திருவாரூர்ச் சிறப்பினையும் தியாகேசர் அருளினையும் ஸ்ரீலஸ்ரீ குருமகாசந்நிதானம் நாமுய்ய அருளிச் செய்தார்கள்.

திருவாரூர்த் திருக்கோயிலும், கமலாலய தீர்த்தமும் ஆழித் தேரும் ஆரூர்க்குப் பேரழகு நல்குவன. இவ்வூரிலுள்ள கோயிலும் குளமும் ஓடையும் ஐந்தைந்து வேலி நிலப்பரப்புக் கொண்டவை. "கோயில் ஐந்துவேலி; குளம் ஐந்துவேலி; செங்கழுநீர் ஓடை ஐந்துவேலி" என்பது மக்கள் வழக்கில் உள்ள தொடர். கமலாலயம், திருக்கோயிலுக்கு மேல்பால் உள்ள தீர்த்தம்.

திருவாரூர்ப் பெருமான் மிகவும் பழமை வாய்ந்தவர். நாவுக்கரசர் இத்தலத்திலிருந்து அருளிய 21 திருப்பதிகங்களுள், "ஒருவனய் உலகேத்த நின்ற நாளோ" என்ற திருப்பதிகத்தில் பத்துப் பாடல்களிலும் ஆதிரைநாளுகந்த ஆரூர்ப் பெருமானின் அருள் தன்மையையும், பழமையையும விளக்கிப் பாடியுள்ளார்.

உலகம், ஒப்பற்ற தலைவனைப் பெருமானை உணர்ந்த காலத்தோ, அவனே அரி, அயன் அரனுகத் தோன்றிய காலத்தோ, கோபத்தோடு காலனைக் காய்ந்த நாளிலோ, மன்மதனை அழித்த நாளிலோ, மண்ணையும் விண்ணையும் படைத்த காலத்திலோ; மான் ஏந்தி உமையவள் ஒருபாகம் பெறுமாறு அருள்செய்த காலத்திலோ, அதற்கு முன்னே, பின்னே பெருமான் திருவாரூரைக் கோயிலாகக் கொண்ட நாள் எது என்று அறிந்திலேன் என்கிருர் திருநாவுக்கரசர். இக்கருத்தமைந்த பாடல் வருமாறு;

ஒருவனய் உலகேத்த நின்ற நாளோ
  ஓர்உருவே மூவுருவம் ஆன நாளோ
கருவனய்க் காலனைமுன் காய்ந்த நாளோ
  காமனையும் கண்ணழலால் விழித்த நாளோ
மருவனய் மண்ணும் விண்ணும் தெரித்த நாளோ
  மான்மறிக்கை ஏந்திஓர் மாது ஓர்பாகம்
திருவினள் சேர்வதற்கு முன்னே பின்னே
  திருவாரூர் கோயிலாக் கொண்ட நாளே.

இப்பதிகத்தின் ஒவ்வொரு பாடலிலும் பெருமான் அருளிச் செயல்களை எடுத்தோதி அவை நிகழும் முன்னே, பின்னே, எது திருவாரூரைப் பெருமான் கோயிலாக் கொண்ட நாள்! என வியந்து பாடியருளினர். ஞானசம்பந்தர் இத்தலம்பற்றி 34 திருப்பதிகங்கள் பாடியுள்ளார். சுந்தரர் எட்டுப் பதிகங்கள் பாடினர். சுந்தரர் "திருவாரூர்ப் பிறந்தார்கள் எல்லார்க்கும் அடியேன்" என ஆரூரில் பிறக்க முத்திதரும் இறையருட் செயலைக் குறித்தருளினர்.

திருவாரூர் சப்த விடங்கத்தலங்களுள் ஒன்று.

சீரார் திருவாரூர் தென்னுகை நள்ளாறு
காரார் மறைக்காடு காருயல்—பேரான
ஒத்ததிரு வாய்மூர் உவந்ததிருக் கோளிலி
சத்த விடங்கத் தலம்.

என்னும் பாடல் சத்தவிடங்கத் தலங்களைக் குறிப்பது.

திருவாரூர்ப் பெருமானை ஞானசம்பந்தர், நாவுக்கரசர், சுந்தரர் ஆகிய மூவரும் உளமுருகிப் பாடிப் போற்றினர். 'தம் உள்ளத்தில் இப்பெருமான் அருளிச் செயல் எத்தன்மைத்தோ, இவர்நம்மை ஏற்பாரோ' என்று பக்தி மேலிட்டால் பதைபதைத்து நைந்துருகிப் பாடினுர். ஞானசம்பந்தர் "அந்தமாய் உலகாதியும் ஆயினுன்" எனத் தொடங்கும் திருப்பதிகத்தில்

... ... "திருவாரூர் எம்
எந்தை தானெனை ஏன்றுகொளுங்கொலோ"

என்றும் "அஞ்சல் என்னுததே" என்றும் பாடினுர். நாவுக்கரசர் "குலம்பலம் பாவருகுண்டர் முன்னே" எனத்தொடங்கும் பதிகத்தில் "புற்றிடம் கொண்டான் தன் தொண்டர்க்குத் தொண்டராம் புண்ணியம் உண்டுகொலோ!" என்று அமணர்களோடு தாம் இருந்த நிலை எண்ணித் தமக்கு உய்யுநெறி உண்டாமோ' எனக் கருதிப் போற்றினுர். சுந்தரர் "கரையும் கடலும் மலையும்" எனத் தொடங்கும் பதிகத்தில் "எந்தை இருப்பதும் ஆரூர்! அவர் எம்மையும் ஆள்வரோ கேளீர்" என தமக்கும் இறையருள் கூடுமோ எனப் போற்றினுர். இங்ஙனம் மூவரும் ஆதிரையனும் ஆரூரனை, உருகி உருகி உள்நினைந்து ஏத்திய திறத்தினை ஒப்பிட்டுத் திருநெறிய தெய்வத்தமிழ் நலம் சுட்டியருளியமை மிகச்சிரிய ஆய்வாக அமைந்தது.

தருமை ஆதீன முதற்குரவர் ஸ்ரீ குருஞானசம்பந்தர் திருவாரூர்ச் சித்தீச்சரத்தில் கமலை ஞானப்பிரகாசரிடம் ஞான உபதேசம் பெற்றவர். கமலை ஞானப்பிரகாசர் திருவாரூர்ச் செட்டித் தெருவில் வசித்தவர். திருவாரூரில் ஆசாரியர் வாழ்ந்தார் என்ற சிறப்பையும் குருபக்தி நலம் தோன்ற விளக்கினுர்கள். திருவாரூர்த் திருக்கோயிலில் இராஜன் கட்டளை தருமை ஆதீன ஆட்சியில் உள்ளமை சுட்டினுர்கள்.

இங்ஙனம் பற்பல சிறப்புக்கள் மிக்க திருவாரூரிலே தண்டியடிகள் ஆற்றிய அரியதொண்டினைப் புராணத்தின் வாயிலாக விளக்கினுர்கள்.

பிறவிக் குருடராம் தண்டியடிகள், திருவாரூர்க் கமலாலயம் சமணப்பாழிகள் அமைத்துத் தூர்க்கப்பட்டு இருந்தமை அறிந்தார்.

கமலாலயத்தைத் அகலமாக்கியும் ஆழப்படுத்தியும் தொண்டு செய்யக் கருதினர். தாம் குருடராயினும் செயத்தக்க செயலை எண்ணித் துணிந்தார். குளத்தில் அகழும் குழியின் ஓரத்தில் ஒரு கோல் நட்டார். அதில் கயிறு கட்டினர். குளத்தின் கரையில் ஒரு கோல் நட்டார். குளத்தின் குழியை அடுத்துக் கோலில் கட்டப்பட்ட கயிற்றைக் குளக்கரையில் நட்ட கோலில் முடித்தார். அதனைப் பிடித்துக் கொண்டு குளத்தில் இறங்கினர். மண்ணை வெட்டினர். கூடையில் போட்டார். அதனைச் சுமந்தார். கயிற்றைப் பிடித்துக் கொண்டு கரையேறினர். கரையில் மண்ணைக் கொட்டினர். இச் செயல் திருவைந்தெழுத்தை ஓதியவாறே நிகழ்ந்தது! இவ்வாறு நாள்தோறும் இடையரு முயற்சியுடன் திருத்தொண்டு புரிந்தார்.

சமணர்கள் இச்செயல் கண்டனர்; பொருமை கொண்டனர். ஆலோசித்தனர். தண்டியடிகளை அடைந்தனர். ''மண்ணை வெட்டுவதால் அதில் வாழும் பிராணிகள் மடியும். வீணே வருந்தி இச்செயல் செய்ய வேண்டா'' என்றனர். தண்டியடிகள், "சிவ பெருமானுக்குச் செய்யும் பணி எதுவாயினும் அதுவே குற்றம் இல்லாத அறம்'' என்ருர். "நாங்கள்கூறும் அறத்தினைக்கேட்டிலை; கண்களை இழந்து நிற்கும் நீ காதுகளையும் இழந்தாயோ?" சமணர் கள் இங்ஙனம் அவமதித்துக் கூறினர். 'மந்த உணர்வும் செவிட்டுக் காதும் குருட்டுக் கண்ணும்' உங்களுக்கே உரியன. சிவபெருமான் திருவடிகளே எம்மால் காணக்கூடியது. நீங்கள்உணர்வும் கண்ணும் இழந்து நிற்க, என் கண்கள் காணப்பெற்ருல் என்செய்வீர்கள்? இவ்வாறு இறையருள் நிலையில் தண்டியடிகள் மறுமொழிகூறினர். ''உன் தெய்வத்தின் அருளால் நீ கண் பெற்ருல் நாங்கள்இவ்வூரில் இருக்க மாட்டோம்'' என்றனர் சமணர்கள். தண்டியடிகள் வைத்திருந்த கூடையைப் பிடுங்கி எறிந்தனர். கயிற்றையும் நடு தறியையும் பறித்து வீசினர்.

அடிகள் வெகுண்டார்; பூங்கோயில் அடைந்தார்; வணங்கினர். "சமணர் அவமானம் செய்தனர்; மனம்உடைந்தேன்; நீ திருவருள் புரிக'' என்று வேண்டினர். திருமடம் சார்ந்தார். அழுதார், துயின்ருர், பெருமான் கனவில் தோன்றினர். "நீ கண்பெறுவாய்; அமணர் கண்இழப்பர்; காண்பாய்'' என அருளினர்; மறைந்தார். பெருமான் சோழமன்னன் கனவில் தோன்றினர். நிகழ்ந்தன கூறினர். "தண்டி மனம் கொண்டவாறு அவன்எண்ணத்தை நிறை வேற்றுக'' எனக் கட்டளையிட்டு மறைந்தார்.

பொழுது புலர்ந்தது. சோழன் தண்டியடிகளை அடைந்தான். கனுப்பற்றிக் கூறினன். தண்டியடிகள் பெருமான் அருள்நினைந்தார். நிகழ்ந்தன கூறினர். இறையருளால் தாம்கண்பெற்ருல் சமணர்கள்

இவ்வூரை விடுத்துச் செல்வதாய்க் கூறிய மாற்றத்தைப் புகன்றார். உண்மை நிலை அறிந்து வழக்கினை முடிக்க வேண்டினர்.

அரசனும், தண்டியடிகளும், சமணரும் கமலாலயக் குளக்கரை சார்ந்தனர். அரசன் தண்டியடிகளை நோக்கிச் "சிவபெருமான் திருவருளால் நீர் கண் பெறுதலைக் காட்டும்" என்றான்.

"ஏய்ந்த அடிமை சிவனுக்குயான்
என்னில் இன்றுஎன் கண்பெற்று
வேந்தன் எதிரே திருவாரூர்
விரவும் சமணர் கண்இழப்பர்!
ஆய்ந்த பொருளும் சிவபதமே
ஆவது என்றே அஞ்செழுத்தை
வாய்ந்த தொண்டர் எடுத்தோதி
மணிநீர் வாவி மூழ்கினர்"

என்னே இறைவன் திருவருள்! தண்டியடிகள் கண் பெற்றார். சமணர் கண் இழந்தனர். அரசன், திருவருள் வியந்தான்! சமணர்களைத் திருவாரூரிலிருந்து ஓடத் துரத்தினான். கமலாலயத்தைச் சுற்றி அமைந்த பாழிகளையும் பள்ளிகளையும் இடித்தான். கண் ஒளிபெற்ற தண்டியடிகள், தாம் மேற்கொண்ட திருப்பணியைக் குறைவற நிறைவித்தார். திருவைந்தெழுத்து ஓதியவாறு திருத்தொண்டுகள் பல ஆற்றினர். இறைவன் திருவடி நீழல் எய்தினர். மணி நீர்க்குளத்தில் மூழ்குங்கால் திருவைந்தெழுத்தை ஓதியமையை அமர்நீதி நாயனர் கோவணத்திற்கு ஈடாகத் துலைத் தட்டில் ஏறியபோது அஞ்செழுத்து ஓதி ஏறியமையோடு ஒப்பிட்டுப் பஞ்சாட்சரப் பெருமையை அருளிச் செய்தார்கள்.

அருளுபதேசம் திருமுறை, மற்றும் சாத்திர ஒப்பீடுகள் அமையச் செந்நெறி விளக்கமாய்த் திகழ்ந்தது! திருவாரூர்க் கும்பாபிஷேகம் ஏப்ரல் 4 ஆம் நாள் நிகழ இருந்த அத்தருணத்தில் ஆரூரில் அவதரித்து அருட்பணி புரிந்த தண்டியடிகள் நாயனர் புராணம் சிந்திக்குத் திருவருள் வாய்ப்பைச் சுட்டி வியந்து, முன்னைய அருளுபதேசங்களின்போதும் இத்தகு திருவருட் பொருத்தம் அமைந்தமையைக் குறிப்பிட்டார்கள்.

உபதேசம் நிறைந்தது! புதிய சிந்தனைகளைச் சுமந்தோம்! மனம் நிறைந்தது! இன்சுவைக் கனிச்சாறு பருகினோம்! இல்லம் சேர்ந்தோம்.

ஆய்ந்தபொருள் சிவபதமே ஆவதென உரைத்தார்தம்
தோய்ந்தநலப் பெருமைசொலும் துறவரசர் தாள்போற்றி!

வாழ்க குருமணிகள்!

செய்திகள்

ஆயில்யத் திருநாள் ஆலய வழிபாடு

தருமை ஆதீனம் ஸ்ரீலஸ்ரீ குருமகாசந்நிதானத்தின் ஜன்ம நட்சத்திரமாகிய ஆயில்யத்திருநாளில் சிவதலச்சிறப்பு வழிபாடுகள் நிகழ்ந்து வருகின்றன. பிரபவ - பங்குனி - ஆயில்யத் திருநாள் 29—3—88 செவ்வாயன்று நாங்கூர் அருள்மிகு மதங்கீசுவரத் திருக்கோயிலில் விசேஷ அபிஷேக ஆராதனைகளுடன் சிறப்பு வழிபாடு நிகழ்ந்தது. 'நாங்கூர்த் தலச்சிறப்பும் தேவாரப் பாடல் களும்' என்னும் நூல் வெளியிடப்பெற்றது. வித்துவான் திரு. வி. சா. குருசாமி தேசிகர், எம். ஏ., தலச்சிறப்புக்களை விளக்கி உரை நிகழ்த்தினர். அன்பர்கள் வழிபட்டுப் பயன்பெற்றனர்.

குருவருளும் அருளுபதேசமும்

தருமை ஆதீனத் திருமடத்தில் ஆங்கில மாத முதல் ஞாயிறு தோறும் ஸ்ரீலஸ்ரீ குருமகாசந்நிதானத்தை அன்பர்கள் வழிபட்டு அருளுபதேசம் பெறும் பிரார்த்தனைக்கூட்டம் நிகழ்ந்து வருகின்றது. இம்மாதம் 82 ஆம் அருளுபதேசம் 3—4—88 அன்று திருமுறைப் பண்ணிசையுடன் தொடங்கி நடைபெற்றது.

தருமை ஆதீனம் ஸ்ரீலஸ்ரீ குருமகாசந்நிதானத்தில் பெரிய புராணத்தின் வாயிலாகச் சைவசித்தாந்த நெறி விளக்கம் செய்தருள்கின்றனர்கள். இம்மாதம் மூர்க்கநாயனர், சோமாசி மாற நாயனர் புராணங்களை உபதேசித்தார்கள். சூது கற்ற மூர்க்கர் பலகலைகளையும் அறியும் விருப்பொடு சூதும் கற்றார் என்றும் முதல் ஆயம் தோற்றுச் செலவிடுத்துப் பின் ஆயங்களில் வென்ற பொருள் கொண்டு அடியார்க்கு அமுது செய்வித்தருளினர் என்றும் நாயனர் மாண்பை விளக்கியருளினர்கள். சோமாசிமாறர் புராணம் அருளும் போது சோமயாகம் செய்வோர் சோமயாஜி என வழங்கப் பெற்றமையையும் அச்சொல்லே சோமாசி எனத் தமிழில் மருவி வந்தமையையும் குறிப்பிட்டுச் சிவவேள்வி, வைதிகவேள்வி என்ற வேள்வி நெறிகள் பற்றிச் சில குறிப்புக்களை நல்கிச் சிந்தனை விருந்து நல்கினர்கள்.

ஆதீன அடியார்களும், மயிலாடுதுறை அன்பர்களும், பக்தர் களும் ஆசிரியர்களும் அலுவலர்களும் மாணவர்களும் அருளுப தேசம் கேட்டும் ஸ்ரீலஸ்ரீ குருமணிகளைத் தரிசித்தும் பயனுற்றனர். அடுத்து 83 ஆம் அருளுபதேசம் 1—5—88 அன்று நடைபெறும். அன்பர்கள் கலந்துகொண்டு பயன்பெறுவாராக.

பங்குனித் திங்கள் பெருவிழா

வேளூரில் :

தருமை ஆதீனத்துக்குச் சொந்தமான வேளூர் என வழங்கும் வைத்தீசுவரன்கோயில் ஸ்ரீ வைத்தியநாதசுவாமி தேவஸ்தானத்தில் 23—3—88 புதன்கிழமை தொடங்கிப் பத்து நாட்கள் பங்குனி உத்திரப் பெருவிழா சிறப்பாக நடைபெற்றது. கொடியேற்றம், சகோபுரக் காட்சி, திருத்தேர்விழா, தீர்த்தத் திருவிழா ஆகிய சிறப்புத் திருநாள்கள் கொண்டாடப் பெற்றன. 28—3—88 திங்கட்கிழமை திருமுறைவிழாவும் தேவார வகுப்பு ஆண்டு விழாவும் சிறப்பாக நடைபெற்றது. விழா நாட்களில் தக்க புலவர்களைக் கொண்டு சமயச் சொற்பொழிவுகள் நிகழ்த்துவிக்கப் பெற்றன. அன்பர்கள் சுவாமிதரிசனம் செய்தும் சொற்பொழிவுகளைக் கேட்டும் பயன்பெற்றனர்.

திருபுவனத்தில் :

தருமை ஆதீனத்திற்குச் சொந்தமான திருபுவனம் ஸ்ரீ கம்பகரேசுவர சுவாமி தேவஸ்தானத்தில் 23—3—88 புதன்கிழமை முதல் பத்துநாட்கள் பங்குனி உத்திரப் பெருவிழா சிறப்பாக நடைபெற்றது. கொடியேற்றம், தன்னைத்தான் அருச்சித்தல், சகோபுரக் காட்சி, திருக்கல்யாண விழா, திருத்தேர்விழா ஆகியவை சிறப்புத் திருநாள்களாக நடைபெற்றன. விழாநாட்களில் தக்க புலவர்களைக் கொண்டு சமயச்சொற்பொழிவுகள் நிகழ்த்துவிக்கப் பெற்றன. அன்பர்கள் சுவாமிதரிசனம் செய்தும் சொற்பொழிவுகள் கேட்டும் பயன்பெற்றனர்.

பேரளத்தில் :

தருமை ஆதீனத்திற்குச் சொந்தமான பேரளம் ஸ்ரீ சுயம்புநாத சுவாமி தேவஸ்தானத்தில் உருத்திரபாதத் தீர்த்தத் திருநாள் 1—4—88 வெள்ளிக்கிழமையன்று நடைபெற்றது. அன்று காலை பஞ்சமூர்த்திகளுக்கும் விசேஷ அபிஷேக ஆராதனைகளும் அக்னி புஷ்கரணியில் தீர்த்தம் கொடுத்தருளலும் இரவு திருவீதியுலாவும் சமயச் சொற்பொழிவும் நிகழ்ந்தன. அன்பர்கள் தரிசித்தும், சொற்பொழிவு கேட்டும் பயன் பெற்றனர்.

வசந்த நவராத்திரி விழா

தருமை ஆதீனம் ஸ்ரீ ஆனந்தபரவசர் பூங்காவில் எழுந்தருளி அருள்பாலிக்கும் ஸ்ரீ வனதுர்க்காதேவிக்கு வசந்த நவராத்திரிவிழா

18—3—88 வெள்ளிக்கிழமை அன்று தொடங்கிச் சிறப்பாக நடைபெற்றது. இந்நாட்களில் உலக நலன் கருதி ஸ்ரீ வனதுர்க்கா தேவிக்கு விசேஷ அபிஷேக அலங்கார ஆராதனைகளும் நவசக்தி அருச்சனை மூலம் இலட்சார்ச்சனையும் சப்தசதீ மகாமந்திர அருச்சனையும் நிகழ்த்தப் பெற்றன. 26—3—88 சனிக்கிழமையன்று சப்தசதீ பூஜாஹோமமும் இரவு இலட்சார்ச்சனைப் பூர்த்தியும் நடைபெற்றன. தேவியின் சந்நிதியில் தேவீமகாத்மிய பாராயணம். அபிராமி அந்தாதி பாராயணம் முதலியன நடைபெற்றன. நாள்தோறும் ஸ்ரீலஸ்ரீ குருமகாசந்நிதானத்தில் எழுந்தருளி வழிபாடாற்றி அன்பர்கட்கு அருட்பிரசாதம் வழங்கினார்கள்.

நந்தியெம்பெருமான் திருக்கல்யாண விழா

சிலாத முனிவரின் புதல்வராய்த் தவப்பயனால் அவதரித்துத் தவம் இயற்றிய நந்திதேவருக்கு இறைவன் கங்கை நீர் முதலிய ஐவகை நீராலும் அபிஷேகம் செய்வித்துத் தீட்சையும் அருளித் திருமழபாடிக்கு எழுந்தருளி, வசிட்ட முனிவரின் மகளாகிய சுயசாம்பிகையைத் திருமணம் செய்வித்து, பஞ்சபூதப் பிரதட்சணமாகத் திருவையாற்றுக்கு எழுந்தருளும் விழா 26—3—88 சனிக்கிழமையன்று தருமை ஆதீனம் திருவையாறு ஸ்ரீ பஞ்சநதீசுவர சுவாமி தேவஸ்தானத்தில் சிறப்பாக நடைபெற்றது. திருநந்தியெம்பெருமான் திருக்கல்யாண விழா 27—4—88 புதன்கிழமையன்று சிறப்பாக நடைபெற்றது. அன்பர்கள் தரிசித்துப் பயன்பெற்றனர்.

"மாயை" பற்றிய கருத்தரங்கம்

தருமை ஆதீன அனைத்துலக சைவசித்தாந்த ஆராய்ச்சி நிறுவனமும், சென்னைப் பல்கலைக் கழக டாக்டர் இராதாகிருஷ்ணன் மேனிலை ஆய்வு நிறுவனமும், சென்னைப் பல்கலைக் கழகத் தத்துவத் துறையும் இணைந்து 14—3—88 முதல் 16—3—88 வரை "சைவ சித்தாந்தத்திலும் அத்வைத வேதாந்தத்திலும் மாயை பற்றிய கோட்பாடுகள்" என்ற தலைப்பில் சென்னைப் பல்கலைக் கழகத் தத்துவத் துறையில் ஒரு கருத்தரங்கம் நிகழ்வுற்றது. தருமை ஆதீனம் ஸ்ரீலஸ்ரீ குருமகா சந்நிதானம் வழங்கியருளிய ஆசியுரையைத் தருமை ஆதீனம் அனைத்துலக சைவ சித்தாந்த ஆராய்ச்சி நிறுவன இயக்குநர் திரு. டி. என். இராமச்சந்திரன் அவர்கள் வாசித்து, ஆராய்ச்சி நிறுவனப் பணியினையும் விளக்கமாக எடுத்துரைத்தார். பல்வேறு அறிஞர்களும் கருத்தரங்கில் கலந்து கொண்டு மாயை பற்றிய அவ்வம் மதக் கோட்பாடுகளைக் கொண்ட கட்டுரைகளை வாசித்து ஐயங்களுக்கு விடை இறுத்துத் தெளிவு படுத்தினர். முதன்மையுரை நிகழ்த்திய பாஷ்யபவக்கு ஸ்ரீ வரகூர் கல்யாணசுந்தர சாஸ்திரிகளும், காஞ்சிபுரம் மகாவித்துவான் திரு. சி. அருணைவடிவேலு முதலியார் அவர்களும் அத்வைதம்

மற்றும் சைவசித்தாந்தத்தின் வழிநின்று மாயைபற்றிய கோட்பாடுகளை விளக்கியுரைத்தனர். டாக்டர் இராதாகிருஷ்ணன் மேனிலை ஆய்வு நிறுவன முன்னாள் இயக்குநர் திரு. வி. ஏ. தேவசேனாபதி அவர்கள், "கோட்பாடுகளை உள்ளத்தில் தெளிவாக இருத்திக் கொண்டு பின்பு அவ்வக்கொள்கைகளை ஆராய வேண்டியது ஆய்வாளர் கடமை" என்பதைத் தெளிவுறுத்தினார்கள். டாக்டர் திரு. எஸ். என். கந்தசாமி, டாக்டர் திரு. டி. பி. சித்தலிங்கையா, டாக்டர் திரு. ஆ. ஆனந்தராசன், டாக்டர் திரு. வீழிநாதன், பேராசிரியர் திரு.டி. பிரகலாதாச்சார், டாக்டர் திரு.எஸ். கங்காதரன், டாக்டர் திரு. கு. சுந்தரமூர்த்தி, திரு. டி. என். இராமச்சந்திரன், டாக்டர் திரு. வை. இரத்தினசபாபதி, டாக்டர் திரு. ஆர். பால சுப்பிரமணியம் முதலிய அறிஞர்கள் கருத்தரங்கில் பங்கு கொண்டு சிறப்பித்தனர்.

டாக்டர் இராதாகிருஷ்ணன் ஆய்வுநிறுவன இயக்குநர் டாக்டர் ஆர். பாலசுப்பிரமணியம் அவர்களுக்கு, கருத்தரங்க முடிவு நாளில் தருமை ஆதீனக் குருமணி அவர்களின் ஆசி கவசமாக இயக்குநர் பொன்னாடை போர்த்திச் சிறப்புச் செய்தார். திரு. ஆர். பாலசுப்பிரமணியம் அவர்கள் நன்றியுரை நவில மூன்றும் நாள் கருத்தரங்கம் இனிதே முடிவுற்றது.

மயிலாடுதுறை சைவசித்தாந்த கல்லூரி ஆண்டு நிறைவு விழா

அனைத்துலக சைவசித்தாந்த ஆராய்ச்சி நிறுவனத்தின் சார்பில் மயிலாடுதுறை மையத்தில் நிகழ்ந்துவரும் தருமை ஆதீனம் ஸ்ரீலஸ்ரீ கயிலைக் குருமணி கனகாபிஷேக நினைவு சைவசித்தாந்த (மாலை நேரக்) கல்லூரி முதலாண்டு நிறைவு விழா 28—3—88 அன்று கல்லூரியின் வளாகத்தில் (ஸ்ரீ குருஞானசம்பந்தர் மிஷன் மெட்ரிகுலேஷன் பள்ளி, 57 மகாதானத் தெரு, மயிலாடுதுறை) நடைபெற்றது. இறைவணக்கத்திற்குப் பின் டாக்டர் திரு. சொ. சிங்காரவேலன் வரவேற்புரை நிகழ்த்தினார். டாக்டர் திரு. மு. சிவச்சந்திரன், தருமை ஆதீனம் ஸ்ரீலஸ்ரீ குருமகாசந்நிதானத்திற்கு வரவேற்புப்பாமலர் வாசித்துச் சமர்ப்பித்தார். வழக்குரைஞரும் இக்கல்லூரி மாணவரும் ஆகிய செந்தமிழ்ப் புரவலர் திரு. இரா. இராசசேகரன் ஸ்ரீலஸ்ரீ குருமகாசந்நிதானத்திற்கு மலர் மாலை சூட்டிப் பணிந்தார். தருமைஆதீன ஸ்ரீலஸ்ரீ குருமணிகள் விழாவிற்கு எழுந்தருளி ஆசியுரை வழங்கியருளினார்கள். கல்லூரி மாணவர்களில் வருகைப் பதிவு மிகுதியாகப் பெற்ற மயிலாடுதுறை திரு. கி. சங்கரன், தருமபுரம் ஆசிரியர் திரு. ஏ. சீனிவாசன் (முதல் பரிசு) தருமபுரம் ஆசிரியர் திரு. எம். கிருஷ்ணமூர்த்தி (இரண்டாம் பரிசு)

பூந்தோட்டம் மருதவஞ்சேரி ஆசிரியர் திரு. சீனி. நடராசன் (மூன்றும் பரிசு) ஆகிய நால்வருக்கு ரொக்கப் பரிசுகளை வழங்கி ஊக்கப்படுத்தியமை குறிப்பிடத்தக்கது. மாணவர் சார்பில், இம்மையத்தில் பேராசிரியர் டாக்டர் திரு. சொ. சிங்காரவேலன் அவர்களுக்கும், டாக்டர் திரு. கு. சுந்தரமூர்த்தி அவர்களுக்கும் ஸ்ரீலஸ்ரீ குருமகாசந்நிதானம் பொன்னுடை அணிவித்துப் பாராட்டிச் சிறப்புச் செய்து ஆசியருளினார்கள். மாணவர்களின் கையெழுத்துப் பிரதியாகிய "ஞானதீபம்" என்ற மலரை ஸ்ரீலஸ்ரீ குருமகா சந்நிதானத்தில் வெளியிட்டு மாணவர்களின் முயற்சியைப் பாராட்டினார்கள். மயிலாடுதுறை வழக்குமன்றச் சார்பு நடுவர் திரு. ஆர். சிங்காரவேலு, பி. ஏ., பி. எல்., அவர்கள் தலைமையேற்று, உரை நிகழ்த்தினர். மேலும் டாக்டர் திரு. சொ. சிங்காரவேலன் அவர்களால் தொகுக்கப்பெற்ற சைவ சமயம் - வரலாற்றுப்பார்வை என்ற நூலையும், டாக்டர் திரு. கு. சுந்தரமூர்த்தி அவர்கள் எழுதிய 'அறுவகைச் சமயம் - சைவ சித்தாந்தம் - ஒப்பீடு' என்ற நூலையும் வெளியிட்டார். முதல் பிரதியை மயிலாடுதுறை இந்தியன் வங்கி மேலாளர் திரு. டி. பி. சீனிவாசன் அவர்களும், அடுத்தடுத்த பிரதிகளை டாக்டர் திரு. சாமிநாதன் அவர்களும், வழக்குரைஞர் திரு. சி. ஆர். குஞ்சிதபாதம் அவர்களும் பெற்றுக் கொண்டனர். ஆய்வு நிறுவனப் பதிவாளர் சொ. முத்தையன் நன்றி கூறக் கூட்டம் இனிது நிறைவுற்றது.

கடிதம்

புலவர் மு. செகந்நாதன், எம். ஏ.,
தலைமைத் தமிழாசிரியர்,
தவத்திரு சாத்தலிங்க அடிகளார்
உயர்நிலைப்பள்ளி.

பேரூர்,
கோவை. 10

6—4—1988.

தங்களது அருளுபதேசங்களை ஞானசம்பந்தம் இதழ்வழியும் - வானொலி தொலைக்காட்சி வழியாகவும் கண்டும் கேட்டும் பெரு மகிழ்வுற்று வருகின்றேன்.

" ஞானசம்பந்தம் " 10—3—1988 இதழ் பெற்று முதலாகத் தங்களது அருளுபதேச உரையினைப் படித்து உளமகிழ்ந்தேன். திருமூலரது வரலாற்று நிகழ்ச்சியினைக் குறித்து அருளிய உரையில்- மூலன் என்ற சொல் மூலமாக இருப்பவர் என்ற பொருளுரை கண்டு களிப்புற்றேன். திருமந்திரத்தின் சிறப்பைப் பின்னொரு போழ்து விளக்கத் திருவுளம் கொண்டிருப்பது அறிந்து அந்நாளையும் அவ்வுரை விளக்கத்தினையும் எதிர்நோக்கியுள்ளேன்.

எதிர்காலம்

ஜோதிஷம் திரு. A. இராசமாணிக்கம்

ஓய்வுபெற்ற ஆசிரியர்

ஸ்ரீ குமரகுருபர சுவாமிகள் நடுநிலைப்பள்ளி, திருப்பனந்தாள்.

(விபவஹு சித்திரைமீ 1வ முதல் 31வ முடிய)

(13—4—1988 முதல் 13—5—1988 முடிய)

கலியுகம் 5089 விபவ ஹுத்தின் கலி சுத்ததினம் 1858799 நாள் 16 நாழிகை 40 விஞடி. இதை 7ஆல் வகுத்துவந்த மீதி நாள் சுக்கிராதியாக 6ஆவது தினமாகிய புதவாரம் உதயாதி நாழிகை 16 விஞடி 40க்கு விபவஹு பிறக்கிறது. அன்று விஷுபுண்ணியகாலம்.

இவ்வாண்டின் நவ நாயகர்கள்

இராஜா சுக்கிரன். ஸஸ்யாதிபதி சனி. இரஸாதிபதி சந்திரன்.
மந்திரி புதன். தானியாதிபதி குரு. நீரஸாதிபதி சனி.
சேஞதிபதி செவ்வாய். அர்க்காதிபதி செவ். மேகாதிபதி செவ்வாய்.

இவர்கள் கலியுகம் 5089 விபவவருடத்துக்கு விண்ணில் இருந்து பூலோக ஜீவன்களை இரட்சித்துக் கொண்டிருக்க ஈஸ்வரனனுக் கிரகம் ஏற்பட்டுள்ளது.

பலன் :- மக்கள் பல கல்வி கற்று வித்தகர்கள் ஆவார்கள். பூமியெல்லாம் நன்கு விளையும். மழை பொழியும். பசுக்கள் வெளுமைப் பொருள்கள் விருத்தியாகும். அரசாங்க நன்மையில் ஜீவிப்போர் மற்றும்படைவீரர்கள் ராஜவிசுவாசத்துடன்செயலாற்றி நாடு காப்பார்கள். அரசர்கள் தர்மம் காத்து நீதியுடன் ஆட்சி செய்வர். நாடுகளில் தொழில் விருத்தி, பொருளாதார விருத்தி ஏற்படும். தேச பிரஜைகள் க்ஷேமமுறுவர். உலகெங்கும் உள்ள திருமடங்கள் ஆசாரிய பீடங்களில் ஈஸ்வரகிருபையில் சிவசமய கர்த்தாக்களாக வந்து சிவபுண்ணியங்களைச் செய்து வருகின்ற சிவஞான குருமகான்கள் ஸ்ரீலஸ்ரீ குருமகாசந்நிதானங்கள் ஜெகத் குருமகான்கள் லோகத்துக்குப் புத்தாண்டில் பொன்னேடு பதிவுறத் தூய ஞானவழி இயம்பி அருள்வார்கள், பக்த கோடிகளுக்கெல்லாம் அருளுபதேசம் செய்து ஆசியருள்வார்கள். தேசங்களில் எங்கும்

தேவாலயங்களில் நித்தியம் ஆறுகால பூஜைகள் சைத்ரோத்ஸவங்கள் பஞ்சமூர்த்திகளின் வீதியுலாக்காட்சிகள் ஆலய நிர்வாக புண்ணியசீலர்களின் சீரியததொண்டினால் இனிது நடைபெறும். எல்லாப் பிரஜைகளும் ஈஸ்வர தரிசனம் செய்து மகிழ்வார்கள்.

1. மேஷம் :- அசுவதி - பரணி - கார்த்திகை ¼

மேஷ ராசி 9 பாதங்களும் சுபபலனாக நடக்கும். பணவருமானம் நிறைய வந்து சேரும். நல்லாபரணம்தரும். வீடுவாகன பிராப்தியில் நல்ல சௌகரியம் தரும். முன்னோர் வழி நிற்றல் சற்புத்திரனாகுதல் நல்ல ஞானத்தில் நல்லுரை நிகழ்த்துதல் ஆகும். எல்லாக்காரியங்களும் கெடியான போக்கில் நடந்து கொண்டிருக்கும். தார புத்திரர்களின் நலம் நன்றாக இருந்து வரும். மே 3, 4 தேதிகள் சந்திராஷ்டமம். ஞாயிறு, திங்கள் சுபம்.

விபவஹு இராசி ஆதாயம் 2. விரயம் 8. ஆரோக்கியம் 6. அனாரோக்கியம் 4. இராஜகோபம் 2. இராஜபூஜிதம் 2. சுகம் 6. துக்கம் 3.

2. ரிஷபம் :- கார்த்திகை ¾ - உரோகிணி - மிருகசீரிஷம் ½

ரிஷப ராசி 9 பாதங்களும் மிச்சிர பலனாக நடக்கும். பணவருமானம் வந்துகொண்டிருக்கும். முக்கியத்துவமான செலவினங்களும் முதலீடு செய்தலும் ஆகும். பொதுநலன்கள், தர்மங்கள் செய்யும். ஏப்ரல் 19, 20 தேதிகளில் அதிர்ஷ்டவசமாக ஓர்பொருள் கைக்கு வரும். நல்ல சௌகரியம் தரும். புத்திரர் புத்திரிகளுக்கு நலம்பல ஏற்படுவதாகும். தாம்பத்திய வாழ்க்கை சுமுகமாக நடந்துவரும். மே 5, 6 தேதிகள் சந்திராஷ்டமம். செவ்வாய், புதன் சுபம்.

விபவஹு இராசி ஆதாயம் 11. விரயம் 14. ஆரோக்கியம் 3. அனாரோக்கியம் 1. இராஜபூஜிதம் 6. இராஜகோபம் 5. சுகம் 6. துக்கம் 3.

3. மிதுனம் :- மிருகசீரிஷம் ½ - திருவாதிரை - புனர்பூசம் ¾

மிதுன ராசி 9 பாதங்களும் சுபமான பலனைத் தரும். பணவருமானம் மூன்று வகையில் வந்துசேரும். ஸ்திரி வழியின் குல சம்பிரதாயங்களில் நல்லவகையில் செலவினங்களையும் ஏற்றுச் செய்யும். நல்லசுக சௌகரியம்தரும். அரசாங்க நன்மைகள் ஏற்பட்டு வரும். வித்துவத்துவம், கலைத்துறைகளில் பிரபலம் தரும். தார புத்திரர்களின் நலம் நன்றாக இருந்துவரும். எல்லாக்காரியங்களும் செம்மையாக நடந்தேறும். மே 7, 8, 9 தேதிகள் சந்திராஷ்டமம், வியாழன், வெள்ளி சுபம்.

விபவஹு இராசி ஆதாயம் 14. விரயம் 11. ஆரோக்கியம் 5. அனுரோக்கியம் 2. இராஜபூஜிதம் 3. இராஜகோபம் 5. சுகம் 6. துக்கம் 3.

4. கடகம் :- புனர்பூசம் ¼ - பூசம் - ஆயில்யம்.

கடக ராசி 9 பாதங்களும் சுபமான பலனைத்தரும். பணவருமானம் பெருமதிப்பில் வந்துகொண்டிருக்கும். வெளுமை வஸ்துவில், பசு பால்பிராப்தியில், கட்டிட நிர்மாணம்,ஸ்திரசொத்துக்களில் விசேஷ பலனை உண்டுபண்ணும். புத்தி மேம்பாட்டில் நல்ல காரியங்களைச் சாதித்தல் ஆகும். அரசாங்க கௌரவம் தரும். கல்வி, கலை, எழுத்துமூலிய விஷயங்களில் நன்மதிப்பும் அனுகூலங்களும் ஏற்படும். தாரபுத்திரர்களின் நலம் நன்கு இருந்துவரும். ஏப்ரல் 13 மே 10, 11 தேதிகள் சந்திராஷ்டம். சனி, ஞாயிறு சுபம்.

விபவஹு இராசி ஆதாயம் 14. விரயம் 2. ஆரோக்கியம் 2. அனுரோக்கியம் 5. இராஜபூஜிதம் 1. இராஜகோபம் 2. சுகம் 2. துக்கம் 1.

5. சிம்மம் :- மகம் - பூரம் - உத்திரம் ¼

சிம்ம ராசி 9 பாதங்களும் மிச்சிர பலனை நடக்கும். பணவருமானம் கண்யஸ்திதிக்கு ஏற்பவரும். வித்துவத்துவம், கலைத்துறைகளில் செய்தொழில், உத்தியோகம், நம்பிக்கை நாணயங்களில் உயர் அந்தஸ்தளிக்கும். பூமி கட்டிடம் இவற்றில் நல்லன ஏற்படும். புத்திரர் பௌத்திரர்களுக்குச் சுபம் தரும். தாம்பத்திய வாழ்க்கை தானதர்மங்களுடன் நடந்துவரும். ரோகம், கிலேசம் நிவர்த்தியாகும். ஏப்ரல் 14, 15, 16 மே 12, 13 தேதிகள் சந்திராஷ்டமம். திங்கள், செவ்வாய் சுபம்.

விபவஹு இராசி ஆதாயம் 11. விரயம் 5. ஆரோக்கியம் 1. அனுரோக்கியம் 4. இராஜபூஜிதம் 4. இராஜ கோபம் 2. சுகம் 6. துக்கம் 3.

6. கன்னி :- உத்திரம் ¾ - ஹஸ்தம் - சித்திரை ½

கன்னியா ராசி 9 பாதங்களும் மிச்சிரபலனை நடக்கும். பணவருமானம் வந்து நிறையும். வித்துவத்துவம் கலைத்துறைகளில் கண்யஸ்திதியும், செய்தொழில், உத்தியோகத்தில் அரசாங்கத்தில் நல்லன ஏற்படுதலும் ஆகும். தாம்பத்திய வாழ்க்கை சுமுகமாக நடந்து வரும். ஓர் இயந்திர வாகனம் தரும். ஏப்ரல் 27, 28 தேதிகளில் கண்ணியம் மிகுந்த செலவு செய்யும். ஏப்ரல் 17, 18 தேதிகள் சந்திராஷ்டமம். புதன், வியாழன் சுபம்.

விபவஹூ இராசி ஆதாயம் 14 விரயம் 11. ஆரோக்கியம் 5. அனுரோக்கியம் 2. இராஜகோபம் 5. இராஜபூஜிதம் 3. சுகம் 6. துக்கம் 3.

7. துலாம் :- சித்திரை ½ - சுவாதி -விசாகம் ¾

துலா ராசி 9 பாதங்களும் சுபபலனாக நடக்கும். பணவருமானம் நல்ல விதத்தில் வரவாகிக் கொண்டிருக்கும். ஏப்ரல் 29 இல் லேவா தேவியில் ஓர் ஒப்பந்தம் செய்யும். இம்மாதம் நெருக்கமாக உள்ள உறவினர் ஒருவர் மனஸ்தாபத்தில் சிறிது காலம் விலகி இருப்பர். வீடுவாகன பிராப்தியில் நல்லசௌகரியம் இருந்துவரும். எல்லாக் காரியங்களும் சமயோசித புத்தி மேம்பாட்டில் நடந்து கொண்டிருக்கும். தாரபுத்திரர்களின் நலம் நன்றாக இருந்துவரும். ஏப்ரல் 19, 20 தேதிகள் சந்திராஷ்டமம், வெள்ளி, சனி சுபம்.

விபவஹூ இராசி ஆதாயம் 11. விரயம் 14. ஆரோக்கியம் 3. அனுரோக்கியம் 1. இராஜபூஜிதம் 6. இராஜகோபம் 5. சுகம் 6. துக்கம் 3.

8. விருச்சிகம் :- விசாகம் ¼ - அனுஷம் - கேட்டை

விருச்சிக ராசி 9 பாதங்களும் சுபபலனாக நடக்கும். பண வருமானம் கணிசமாக வரும். வித்துவத்துவம் கலைத்துறைகளில் சிறப்பும் அரசாங்கத்தில் அனுகூலம் ஏற்பட்டுவருதலும் ஆகும். மனஉறுதியில் தெய்வ ஸ்தோத்திரம் ஜபதவங்களில் நாட்டமாகும். தார புத்திரர்களின் நலம் நன்றாக இருந்துவரும். ஏப்ரல் 21, 22 தேதிகள் சந்திராஷ்டமம். மே 1, 2 தேதிகள் புண்ணிய காரியச் செலவினம் ஆகும். ஞாயிறு, திங்கள் சுபம்.

விபவஹூ இராசி ஆதாயம் 2. விரயம் 8. ஆரோக்கியம் 6. அனுரோக்கியம் 4. இராஜபூஜிதம் 4. இராஜகோபம் 2. சுகம் 6. துக்கம் 3.

9. தனுசு :- மூலம் - பூராடம் - உத்திராடம் ¼

தனுர் ராசி 9 பாதங்களும் மிச்சிரபலனாக நடக்கும். பண வருமானம் வரும். சகோதரர் புத்திரி அம்மான் இவர்கள் நலனில் பிரயத்தனமும் செலவும் ஆகும். ஏப்ரல் 29 தேதிக்கு எழுத்துமூல விஷயங்களில் நல்லன ஏற்படும். வீடுவாகனப் பிராப்தியில் நல் அனுபோகம்இருந்துவரும். எல்லாக்காரியங்களையும் புத்திமேன்மை யில் சிறப்பாக நடத்தும். தாம்பத்திய வாழ்வில் சொகுசு நிலவும். ஏப்ரல் 23, 24, 25 தேதிகள்சந்திராஷ்டமம். செவ்வாய், புதன்சுபம்.

விபவஹூ இராசி ஆதாயம் 5. விரயம் 14. ஆரோக்கியம் 4. அனுரோக்கியம் 5. இராஜபூஜிதம் 3. இராஜகோபம் 5. சுகம் 6. துக்கம் 3.

10. மகரம் :- உத்திராடம் $\frac{3}{4}$ - திருவோணம் - அவிட்டம் $\frac{1}{2}$

மகரராசி 9 பாதங்களும் மிச்சிரபலனாக நடக்கும். பண வருமானம் வரும். உடன் செலவாகும். எதிர்ப்பாளர் சமூகத்தினிடையே இக்கட்டான நிலைமை ஏற்படுதலும் நல்லவர்களால் நிவர்த்தியும் ஆகும். வீடுவாகனங்களில் நல்ல சௌகரியம் ஏற்படும். தாரபுத்திரர்களின் நலம் நன்றாக இருந்துவரும். பொதுவில் இன்னார் எல்லாவற்றிலும் எச்சரிக்கையாக இருத்தல் நலம். ஏப்ரல் 26, 27 தேதிகள் சந்திராஷ்டமம். வியாழன், வெள்ளி சுபம்.

விபவஸு ஆதாயம் 8. விரயம் 8. ஆரோக்கியம 5. அனாரோக்கியம் 6. இராஜபூஜிதம் 7. இராஜகோபம் 5. சுகம் 6. துக்கம் 3.

11. கும்பம் :- அவிட்டம் $\frac{1}{2}$ - சதயம் - பூரட்டாதி $\frac{3}{4}$

கும்பராசி 9 பாதங்களும் சுபபலனாக நடக்கும். பணவருமானங்களில் நல்ல ஸ்திதியை ஏற்படுத்திவரும். பொன் மணி பூஷணம் தரும். ஓர் புண்ணிய ஸ்தலம் சென்றுவருதல் ஆகும். வீடுவாகன பிராப்தியில் நல்ல சௌகரியம் தரும். புத்திரர் பௌத்திரர்களுக்குச் சுபம் நடக்கும். பூஸ்திதி சம்பந்தமாக ஓரளவு பணம் முடங்கும். தாம்பத்திய வாழ்க்கையில் சந்தோஷம் நிலவும். ஏப்ரல் 28, 29, 30 தேதிகள் சந்திராஷ்டமம். சனி, ஞாயிறு சுபம்.

விபவஸு இராசி ஆதாயம் 8. விரயம் 8. ஆரோக்கியம் 5. அனாரோக்கியம் 6. இராஜபூஜிதம் 7. இராஜகோபம் 5. சுகம் 6. துக்கம் 3.

12. மீனம் :- பூரட்டாதி $\frac{1}{4}$ - உத்திரட்டாதி - ரேவதி.

மீன ராசி 9 பாதங்களும் நற்பலனாக நடக்கும். பணவருமானம் கணிசமாக வந்து கொண்டிருக்கும். ஓர் புண்ணிய ஸ்தலம் சென்று வருதல் ஆகும். பூஷணாதிகள் அணியும். வாக்கு நயம் பொருந்தி வசனம் பகர்தலும் பெரியோர் போற்றுதலும் ஆகும். எல்லாக் காரியங்களும் புத்திமேம்பாட்டில் செம்மையாக நடத்தி வரும். மே 1, 2 தேதிகள் சந்திராஷ்டமம். திங்கள், செவ்வாய் சுபம்.

விபவஸு இராசி ஆதாயம் 5. விரயம் 14. ஆரோக்கியம் 4. அனாரோக்கியம் 5. இராஜபூஜிதம் 3. இராஜகோபம் 5. சுகம் 6. துக்கம் 3.

அனைத்துலக சைவசித்தாந்த
ஆராய்ச்சி நிறுவனம்

இதழ்வழிச் சைவ சமயக்கல்வி-IV

பாடம் - 3.

பண்டார சாத்திரங்கள் :

முத்தி நிச்சயம்

(சிற்றுரை)

சைவசித்தாந்தக் கலாநிதி

திரு. தி. ந. இராமச்சந்திரன்

முத்திநிச்சயம் என்ற நூலை அருளியவர் தருமபுர ஆதீனத் திருமடாலய மகா ஞானபீடத்து முதற்குரவர் குருஞானசம்பந்த தேசிக சுவாமிகள். இவர்களது காலம் சுமார் 375 ஆண்டுகளுக்கு முன்பு என்பர்.

முத்தி என்பதை, ஊனடைந்த உடம்பின் பிறவி தானடைந்த உறுதியைச் சார்தல் என்று பொது வகையாகக் குறிக்கலாம். இதை விளக்கும்போதுதான் ஒவ்வொரு கொள்கையரும் ஒவ்வொரு வகையாக விளக்கத் தலைப்படுகின்றனர்.

சமயப் பொறை என்னும் கருதுகோளிற்குத் தக்க மதிப்புத் தருவது சைவசித்தாந்தம். புறச் சமயங்கள் சிவபெருமானால் சோபான முறையில் கூறப்பட்டன என்ற கருத்தை ஏற்கும் அற்புதச் சமயம் சித்தாந்த சைவம். ''புறச் சமய நெறி நின்றும்'' என்று தொடங்கும் சிவஞான சித்தியார் சுபக்கச் செய்யுள் இதற்குச் சான்றாகும்.

“ இணையிலி இரும்பூளை யிடங்கொண்ட வீசன்
அணைவில் சமண்சாக் கியமாக் கியவாறே ”

என்பது ஆளுடைய பிள்ளையார் அருள் வாக்கு.

“ விரிவிலா அறிவினார்கள் வேறொரு சமயம்செய்து
எரிவினாற் சொன்னாரேனு மெம்பிராற் கேற்றதாகும் ”

என்பது வாகீச வேதம்.

" தொன்னூற் பரமசமயந் தோறு மதுவதுவே
நன்னூ லெனத் தெரிந்து நாட்டுவித்து "

என்பது கந்தர்கலிவெண்பா.

சமயங்கள் பலவாகக் கிளைத்துவிட்டபடியால், முத்தியும் பலவகையாகக் கூறப்பட்டு வருகிறது. இதன் விளைவு மலைவாகும். மலைவிற்கு அமைவு அருளாலே, குருபிரானின் கருத்தும் கடமையும் ஆம். இவ்வடிப்படையில் அவதாரமான அருள் நூலே முத்தி நிச்சயம். குருஞானசம்பந்த சுவாமிகள் காலத்தே சிவசமவாதம் தலையெடுத்து ஓங்கிற்று. இதே காலத்தில்தான் ஆன்மானந்த வாதம் என்ற மதமும் உண்டாயிற்று. ஆன்மானந்த வாத மதத்தைப் பரப்பி வந்தவர் கண்கட்டி மறைஞானப் பண்டாரம் என்பவர் ஆவார். ஆன்மானந்தம், சிவசமவாதம் என்னும் இருமதமுத்திகளை மறுக்கு முகத்தான், ஏனைய மத முத்திகளையும் மறுத்தமை குறிப்பாற் காட்டி, முடிந்த பேரின்ப முத்தியாகிய சித்தாந்த முத்தியை இந் நூல் மூலம் அருளி உபகரித்தனர் குருஞானசம்பந்த சுவாமிகள். சித்தாந்த முத்தி அத்துவித முத்தி என்றும், பரமுத்தி என்றும், சாயுச்சிய முத்தி என்றும், சிவானந்த முத்தி என்றும் சொல்லப் படும்.

இந்நூல் இருபத்து இரண்டு வெண்பாக்களான் ஆயது. தெளிவின் பெட்டகம். ஞான வாரிதி. அனுபூதிப் பனுவல். இந் நூலுக்குச் சிற்றுரையும் பேருரையும் கண்டவர், தருமை ஆதீன அடியார் குழாத்துள் ஒருவராகிய வெள்ளியம்பலவாண முனிவர் என்பார். காசிவாசியாக இருந்தவர். குமரகுருபர சுவாமிகளிடத்துப் பயின்றவர். சிவப்பிரகாச சுவாமிகளுக்கும் அவருடைய சகோதரர் களாகிய வேலைய சுவாமிகளுக்கும் கருணைப்பிரகாச சுவாமிகளுக்கும் பேரிலக்கணம் கற்பித்த போதகாசிரியரும் இம்முனிவரே. தென் சொல் கடந்து வடசொற்கு எல்லை தேர்ந்தவர். ஓங்கி ஆழ்ந்து அகன்ற புலமையும் நுட்பமதியும் வாய்ந்தவர். 'ஞானவரண விளக்கம்' என்ற பாடியம் வரைந்தவரும் இவர்தாம்.

20 அடிகள் கொண்ட சிறப்புப் பாயிரம் ஒன்று முத்தி நிச்சய நூலுக்கு ஓர் அணி எனத் திகழ்கிறது. இவ்விருபத்து இரண்டு அடிகளுக்கான விளக்கம் 32 பக்கம் பரந்து கிடக்கிறது. இவ்விளக்கம் வேதாகம சாரம் என்று போற்றும்படி அமைந்துள்ளது. உரை ஆசிரியரின் பரந்து பட்ட நுண்ணறிவு அங்கங்கும் பளிச்சிடுகிறது. செம்மாந்த நடையோடு இயங்கும் பெற்றித்து இவரது தமிழ். கற்கக் கற்கக் களிப்பூட்டுவது.

சித்தாந்த முத்திக்குரிய நாயன்மாரின் பெருமையைப் போற்ற அவதரித்த திருத்தொண்டத் தொகை 88 அடிகளில் அமைந்தது போல் அவர்கள் உற்ற முத்தியின் தன்மை இத்தகையது என்பதை நிச்சயிக்க வந்த இந்நூலும் 88 அடிகளில் அமைந்துள்ளமை அறிந்து போற்றப் பட வேண்டிய அருட் செய்தியாகும்.

தம்முடைய குரு நாதராம் ஞானப்பிரகாச தேசிகரை வணங்கி நூலை இயற்றத் தொடங்குகிறார் குருஞானசம்பந்த சுவாமிகள். குருநாதரின் திருவடிகளைத் 'தார்மேவு சேவடிகள்' என்று போற்று கிறார் நூலாசிரியர். இதற்கு இங்ஙனம் உரை காண்கின்றார் உரை ஆசிரியர். "அடியார் அல்லும் பகலும் அர்ச்சித்தலின் இடையறவு படாது மாலை சூழ்ந்து கிடக்கும் அடி யென்பார், 'தார்மேவு சேவடி' என்றார். மேவு என்பது மேம்பாட்டிற்கும் பெயராகலான், தார்மேவு என்பதை உம்மைத் தொகையாகக் கொண்ட தாரும் மேம்பாடும் பொருந்திய அடி என்றலுமாம். அடிக்கு மேம்பாடு, அடைந்தாரைப் பின்பு முன்போற் பிறவிக் கடலுள் வீழாது காத்தலால் உண்டாகும் மேன்மை."

'குருபாதம்' என்றேத்திய பின்னரே எப்பணியும் தொடங்கும் இவ்வாதீன மரபே மரபு! இந்நூலின் இரண்டாம் பாடலில், நூலாசிரியர்,

"எந்த முத்தி சித்தாந்த மென்றார்கள் சைவத்தில்
அந்தமுத்தி நிச்சயிப்பேம் யாம்"

என்று அருளியுள்ளார்கள். பரம ஆப்தராலும் அவர் பிரமாணங் களாலும், பலவாப்தர்களாலும் அவர் பிரமாணங்களாலும் நிச்சயிக்கப் பட்டது சிவானந்த அநுபவ முத்தி ஒன்றே என்பதை உரையாசிரியர் தெளிவுபடுத்துகிறார்.

மூன்றும் பாடலுக்கான உரையில், உரையாசிரியர் "பாசத் தோடு கூடின், அதனை அநுபவித்துக் கொண்டு பாசமாய் நிற்றலும், சிவத்தோடு கூடின் அதனை அநுபவித்துக் கொண்டு சிவமாய் நிற்றலுமே அதன் (ஆன்மாவின்) இயல்பு. தனக்கென ஒரியல்பு அதற்கில்லை" என்பதை ஐயந்திரிபுகளுக்கு இடமின்றிக் காட்டி யுள்ளார்.

தன்னைத்தான் ஆசைப்படுதலும் அநுபவித்தலும் சாலாது என்பதே நான்காம் பாடலின் கருத்து என்று தாபிக்கிறார் உரை ஆசிரியர்.

சிற்றின்பம் பேரின்பம் எத்தன்மையன எனவிளக்கும் ஐந்தாம் பாடலுக்கான உரையில், "சிற்றின்பத்தை ஆராய்ந்து பார்த்தால் புண்ணிய பலமான சூக்கும கன்மம் விளங்கும்'' என்றும், அது சிவகுணமன்று என்றும், உரையாசிரியர் காட்டுகிருர். காட்டவே, புணர்ச்சிக் காலத்து இருவரிடத்தும் நிகழ்ந்த வின்பம் அவரவரது ஆறுற்போல் சமாதிக்காலத்து நிகழ்ந்த வின்பம் என்னது ஆதல் வேண்டும் என்ற ஆத்மானந்தவாதியின் கூற்று அர்த்தமற்றது என்பது விளக்கம்.

ஆரும் பாட்டின் உரையுள் ஆன்மானந்த வாதியின் கொள்கை அநுமானப் பிரமாணத்தால் அறிந்தஒன்றே அல்லாது சாக்ஷாத்கார மாகக் காணப்பட்டது அன்று என்று நிலை நிறுத்துகிருர். சொல் மாத்திரையான் அறிந்ததன்றிக் கண்கூடாக அறியாமையின், இவன் பெத்தனுகவே முடிகிருன் என்பது தேற்றம்.

ஏழாம் பாடலில் நூலாசிரியர்,

"பெறுவானீ யானந்தம் பேறென் றுரைத்த
தறியா திருந்தனைநீ யாம்''

என்று அருளியுள்ளார். இதனை இங்ஙனம் விளக்குகிருர் உரை ஆசிரியர் : "ஆன்மாப் பெறுவான் ஆனந்தம் பேறு என்று வரும் பிரமாணங்களை நீ அறியாது மறந்தனையோ! ... பெறுவான் பேறு என்னுஞ் சொல்லியல்பானும், கிடக்கை முறையானும் அவைதாம் வெவ்வேறு என்பது தெற்றென விளங்கும்....''

"உன்னுருவங் கண்டிருப்ப தோகெட்டேன் முத்திசிவன்
தன்னுருவங் கண்டிருக்கத் தக்கதே''

என்பது பாடல் எட்டின் சாரம். இதை, உரையாசிரியர், "(நின் போல் தோன்றி இன்பம் நின் குணமாகலால் குணகுணிகள் வேற்றுமையின்மையின், அது நீயே யாகலின்) நின்னைத்தானே கண்டிருப்பது முத்தியன்று. (இனி எவ்வாறு இருப்பது முத்தி யெனின்), சிவனுருவத்தைப் பார்த்து அநுபவித்திருப்பதே முத்தி'' என்று அற்புதமாக விளக்குகிருர். இங்கு உன்னுருவம என்றது ஆன்ம சொரூபத்தை என்றும் குறிப்புத் தருகிருர். ஆன்மசொரூபம் முத்திநிலை அன்று.

இவ்விடத்தில் ஆன்மானந்தவாதந்தான் யாது, என்று அறிந்து கொள்ளுவோம். முத்தி நிச்சய நூலைச் சிற்றுரையோடு அச்சிற் கொணரப் பணித்தருளியவர்கள் தருமை ஆதீனத்து 24 ஆவது குருமகா சந்நிதானம் ஆவார்கள். நூலைப் பரிசோதித்துக்

குறிப்புரை எழுதியவர் சிவஸ்ரீ சுவாமிநாத பண்டிதர் அவர்கள். ஆன்மானந்த வாதம் என்பதற்குப் பண்டிதர் விளக்கம் வருமாறு: ''ஆன்மாவிற்கு இயற்கையாக ஆனந்தம் உண்டென்றும் அது மலத்தால் தடைப்பட்டது என்றும், அம்மலம் நீங்க, அவ்வானந்தம் வெளிப்பட்டுத் தோன்ற, அதனை ஆன்மா அநுபவிக்கும் என்றும் கூறும் மதம். வாதம் – கூறுதல், தர்க்கித்தலுமாம்.''

ஆன்மானந்த வாதிகள் சைவ சித்தாந்த நெறிவழியே படர்ந்து வந்தும், முடிவு நிலையில் விலகிப் போய்விட்டவர்கள். இது நனி சால வருந்தத் தக்க விடயமாம். நல்வழி பற்றிப் பயின்று வந்தும், பலன் அடையாது கெடும் இவர்களுக்கு நல்லறிவு புகட்டவே முத்தி அருளப்பட்டது. இதை ஒன்பதாம் பாடல் எடுத்துக் காட்டுகிறது.

" ஈசனையே காண வெனத்தவமுன் செய்ததெல்லாம்
மோசமாய் வந்து முடிந்ததே—பாச
வினையகன்ற போதும் விமலனே நின்ருள்
தனையறியா மூடர்க்குத் தான். "

மும்மலம் அகன்ற போதும், பெத்த நிலை கடந்த போதும், முடிவு காண முடியாமல் போனது மோசமே. செய்த தவமெல்லாம் விழலுக்குப் பாய்ச்சிய நீராயிற்று. ஐயகோ! என்னெப்பது!

இந்நிலையை விளக்க உரையாசிரியர், சிவஞான சித்தியார். பரபக்கச் செய்யுள் எட்டின் ஒருவரியைப் பயன்படுத்துகிருர். அவர் கூறுவதாவது: ''எனவே, கரைவரை குறித்துப் போய்க் கடற்கே வீழ்ந்த வாருயிற்று. ஆகவே, தான் பெற்ற சாதனங்கள், சாத்தியத்தை யுண்டாக்க மாட்டாமையின், முன்ஞெரு பின் மலைவு முண்டாயிற்று என்பதாம்.''

இந்நிலை நகைப்புக்குஇடம்தரும்என்று கொண்டஉரையாசிரியர் இப்படிக் கூறுகிருர். ''இதனுனே முத்தனை பின்பு பெத்தரினும் அதிகமூடம் பெற்றமையான், மற்றப் பெத்தனுதலே சிறப்புடைத்து என்பதூஉம் தானே போந்தது.''

இவ்வீன குணம் எஞ்சிய நிலை, பத்தாம் பாடலில் நன்கு சுட்டப் படுகிறது. இப்பாடலுக்கான உரையில், ''நஞ்செய லற்றிந்த நாமற்ற பின்'' என வரும் திருவுந்தியார் மேற்கோளும், ''கற்றதனுலாய பயனென்'' எனவரும் திருக்குறள் மேற்கோளும் காட்டப்படுகின்றன. தவவினைவாகச் சிவம் தோன்ருமல் அவம் தோற்றிய அவலம் இங்கு அருளால் சாடப்படுகிறது.

அறிவில் தோன்றும் ஆனந்தம் என்ற ஒன்று உண்டு என்பது 'சுத்தப்பொய்' என்பதே பாடல் 11 இன் கருத்து. இவ்வுண்மையைச் சாத்திர - தோத்திர நூல்கள் கொண்டு நூலாசிரியர் நிறுவியிருப்பது ஓதி ஓதி மகிழத் தக்கது.

சிவானந்தம் என்பது சிவஞர் வழங்குவது. அவ்வானந்தம் அவ்வான்மாவிற்கு உண்டு ஆகில், அது பலபிறவிகள் எடுக்க அவசியம் என்னை? இருளை ஒட்டுவது கதிரவனது ஒளியே; கண்ணெளி அன்று. இது பாடல் 12 இன் செய்தி. இதை விளக்க வந்த உரையாசிரியர் ''ஆண்டவன் உயர்வும், அடியவன் இழிவும் ஆண்டவன் அடியவனை ஆளுந்திறமும், அடியவன் அவனுல் ஆளப்படும் திறமும், 'பட்டப்பகல் போல வெட்ட வெளியாக விளங்குமாறு, எண்ணிப் பிறப்பிறப்பை யெய்துமோ என்று அவ்வாறு தெரிந்தார் என்று தெளிவுபடுத்திக் காட்டுகிருர்.

'சிவரூபமான பேரானந்தமே உபாசனையால் மலபந்த நிவிர்த்தி செய்து முத்தியில் தோன்றும்' என்று 13 ஆம் பாடல் உரையில் குறிக்கிருர்.

ஆன்மானந்தவாதி ஏகான்மவாதி யல்லன். புறம் போன படியால் சைவனு மல்லன். ஆகவே இவனை மாயாவாதியின் மகன் என்கிருர் ஆசிரியர். இது இவனுக்குப் புதிதாக இயற்றித் தரப்பட்ட பெயர் என்று உரையாசிரியர் 14 ஆம் பாடலில்இதை விளக்குகிருர்.

''இதனுல் ஆன்மானந்தம் சிவானந்தமே யென்பதற்குக் காரணம் கண்டு வைத்தும் அங்ஙனம் கொள்ளாதானைப், பிறிதொரு மதத்தனுகவும் நிறுவிச், சைவத்திற்குப் புறம்பாகத் தள்ளுகின்ருர்'' என்பது 15 ஆம் பாடலுக்கான உரைப் பகுதி வழங்கும் தெளிவு.

ஆன்மானந்த வாதி, தனக்கு அநுகூலமாகக் கொள்ளும் வேதாந்தம், பிரமகீதை முதலியன ஆன்மாவிற்கு இன்பம் உண்டு என்று கூறுவதெல்லாம், பரமான்மாவாகிய சிவனுக்கே அஃதுண்டு என்னும் கருத்துப் பற்றியே. இது பாடல் 16 வழங்கும் செய்தி.

(16 ஆம் பாடல் பாட பேதத்துடன் காணப்படுகிறது. இரண்டிற்கும் தருமபுர ஆதீன வெளியீட்டில் விளக்கம் கிடைக்கின்றது.)

17 ஆம் பாடல் 'சிவசத்தியைப் புணர்தல்' பற்றி விளக்கம் தரும் பாடல். கவனமாகப் பயிலப்பட வேண்டிய பாடல். இதற்கு நீண்ட உரை அருளப் பட்டுள்ளது. பலப்பல மேற்கோள்கள் காட்டி உண்மை நிலையை உணர்த்துகிருர் உரையாசிரியர்.

ஆத்மானந்த வாதியின் மதம் 17 பாடல்களில் ஆராயப் படுகிறது.

சிவமே சச்சிதானந்தம். ஆனந்தம் சிவனாது குணம். சீவன் முத்தர் என்பார், "மன்னைத் திளைத்து வாழ்வார்." மன் என்பதற்கு அரசன் என்று பொருள். இதை, "இங்கே எல்லா உலகிற்கும் அரசராகிய நடராசர்; தியாகராசர் என்க" என்று உரையாசிரியர் விளக்குகிறார். இச்செய்தி 18 ஆம் பாடலின் உரையில் காணக் கிடக்கின்றது.

சிவசமவாத நிராகரணம் பாடல் 19 இல் அருளப்பட்டிக்கிறது. ஆன்மானந்தவாத மத நிராகரணத்திலும் இம்மத நிராகரணம் உண்டு. ஆன்மானந்த வாதிக்கும் சிவசம வாதிக்கும் ஆன்மா சத்சித் ருபியன்றிச் சச்சிதானந்த ருபியன்று என்பதறிவித்து அம் மூன்று ருபமும் ஒருங்குடையவன் முதல்வன் என்று விளக்குகிறார் உரையாசிரியர்.

பாடல் இருபதில், சமனதக் கொள்கை உண்மையாயின் தச காரியத்தில் பல காரியங்களும் வேண்டப்படா என்பது காட்டப் படுகிறது.

பாடல் இருபத்து ஒன்றில், சிவசமமே முத்தியெனில் சித்தாந்தம் அன்றாம் என்பது நிறுவப்படுகிறது.

பாடல் 22 பின்வருமாறு :

"உள்ள மலநீங்கி யோங்கு சிவானந்த
வெள்ளந் திளைத்தது வாய் மேவுதலே–கள்ளவிழ் பூங்
கொத்தார் விரிசடையார் கூறு சிவாகமத்திற்
சித்தாந்த முத்தியெனத் தேறு"

இப்பாடலுக்கு உரை வரையவந்த ஆசிரியர், "இதனால், சித்தாந்த முத்தி யிஃதெனக் கூறுது பிறன் கோள் சிதைத்தவாறே விடுப்பின், சிதையாததனோடு ஒக்கும் ஆகலான், அதனால் "குன்றக் கூறல்" என்னும் குற்றம் பற்றுமாகலானும், அதனால் முதற்கண் அந்த முத்தி நிச்சயிப்போம் என்றது பொய்யாய், "பொய்படுமொன்றோ புனை பூணுங் கையறியாப்பேதை வினைமேற் கொளின்" என்னு மிலக்கியத்தைப் புதுக்குவித்ததாய் முடியுமாகலானும் தமது உட்கோளாகிய சித்தாந்த முத்தியை இஃதெனக் கூறுகின்றார்" என்று குறிக்கோள் நிறுவப்பட்ட சீர்த்தியை வியந்து போற்றுகிறார்.

இங்ஙனம் முத்தி நிச்சயம் நிறுவப்படுகிறது. சைவ சித்தாந்தத்தின் திட்ப நுட்பங்களைத் தெள்ளிதின் உணர்ந்தோரே முத்தி நிச்சயத்தின் அருமை பெருமைகளை நன்கு கற்றுணர முடியும்.

ஒரு சமயத்தின் பெருமை அது கூறும் முத்திநிலையில் பிரதிஷ்டையாகி இருக்கும். முடிநிலை பற்றிய தெளிவு இல்லாத சமயம் உண்மைச்சமயம் ஆகாது. இதுபற்றியே சைவசமயம் உலகில் ஒருதனிச் சமயம் என்று ஏற்கப் பட்டுள்ளது. சைவ சமயத்தின் மேல் ஒரு சமயம் இல்லை. தக்க காரணங்களுடனும், பிரமாணங்களுடன் இதை நிறுவிய நம் குருமார்களுக்கு நாம் என்றென்றும் கடமைப் பட்டு இருக்கிறோம்.

சைவர்கள் பால் குருஞானசம்பந்த சுவாமிகள் கொண்ட அன்பே நூல் வடிவம் உற்று அநுபூதி சித்திக்க வழிவகுத்து அருள் கிறது. இத்தகு நூலுக்கு மூல கிரந்தத்தின் உட்கிடை உணர்ந்த ஞானியே உரையிட ஒல்லும். அப்பெருந்தகுதி படைத்தவரே வெள்ளியம்பலவாண முனிவர்.

இவர் தமது சிற்றுரையில் 45 நூல்களினின்று மேற்கோள்கள் காட்டியுள்ளார். இந்நூல்களில் சில வருமாறு; பிரசிநோபநிடதம், நீலகண்ட பாடியம், சாந்தோக்கியம், கிரியா தீபிகை, சித்தியார், பெரிய புராணம், சிவதருமோத்தரம், ஞானசித்தி, சர்வஞானோத்தரம், திருவுந்தியார், சிவஞானபோதம், அரதத்த சிவாசாரியர் சுலோகம், திருக்களிற்றுப்படியார், சிவப்பிரகாசம், சங்கற்ப நிராகரணம், தருக்க சங்கிரகம், திருவருட்பயன், சிதம்பரச் செய்யுட் கோவை.

1934 ஆம் ஆண்டு முத்தி நிச்சயமும் சிற்றுரையும், தருமபுர ஆதீன வெளியீடாக, நூல் வடிவம் பெற்றது. இதில் மூல நூலின் ஆங்கில மொழி பெயர்ப்பும் தரப்பட்டுள்ளது. இதன் ஆசிரியர் சிவஸ்ரீ ப. மு. சோமசுந்தரம் பிள்ளையாவார்.

மெய்கண்ட சாத்திரங்கள், பதினன்கும் ஓதி முடித்தவரே முத்தி நிச்சய நூலையும், அதற்கான சிற்றுரை பேருரைகளையும் முழுதும் பயன் கொள்ள முடியும் என்பது சான்றோர் கருத்து.

சித்திரை மாதச் சிறப்பு நாட்கள்

13—4—88 புதன், தமிழ் வருடப் பிறப்பு, வேளூர், திருவையாறு மாதப் பிறப்பு தீர்த்தம். மேஷ ரவி 16-40. விஷு புண்ணியகாலம். புதுப் பஞ்சாங்கம் வாசித்தல், நிம்பகுசுமபக்ஷணம்.

14—4—88 வியாழன், பிரதோஷம், மாத சிவராத்திரி.

16—4—88 சனி, சர்வ அமாவாசை.

17—4—88 ஞாயிறு, ஸ்ரீ சிறுத்தொண்டர் நாயனார் குருபூசை.

18—4—88 திங்கள், கிருத்திகை விரதம்.

19—4—88 செவ்வாய், வேளூர் கிருத்திகை, தருமை ஸ்ரீ சண்முகர் அபிடேகம். அக்ஷய திருதியை, திரேதாயுகாதி. சூரியனார் கோயில் ஸ்ரீ சிவாக்கிரகயோகிகள், மங்கையர்கரசியார் குருபூசைகள்.

21—4—88 வியாழன், சீகாழி, திருக்கடவூர், திருப்பனந்தாள் முதலிய தலங்களில் சைத்ரோற்சவாரம்பம். ஸ்ரீசங்கர ஜெயந்தி.

22—4—88 வெள்ளி, சீகாழியில் ஸ்ரீ திருஞானசம்பந்தர் திருமுலைப்பால் உற்சவம். சஷ்டி விரதம்.

25—4—88 திங்கள், திருவையாறு ஆத்மபூசை. சித்திரைப் பெரு விழாவில் சகோபுர ரிஷப வாகனக் காட்சி. திருக்கடவூர் ஸ்ரீ காலசம்காரமூர்த்தி அபிஷேகம்-ஆயில்யவிழா. தருமை ஆதீனம் இருபத்தாருவது குருமகாசந்நிதானம் ஸ்ரீலஸ்ரீ சண்முக தேசிக ஞானசம்பந்த பரமாசாரிய சுவாமிகள் ஜன்ம நக்ஷத்திரவிழா.

26—4—88 செவ்வாய், திருக்கடவூர் ஸ்ரீ காலசம்காரமூர்த்திக்குக் காலையில் அபிஷேகம். இரவு காலசம்காரம்.

27—4—88 புதன், சித்திரைப் பெருவிழாவில் திருக்கல்யாண உற்சவம்.

29—4—88 வெள்ளி, பிரதோஷம். சித்திரைப்பெருவிழாவில் திருத்தேர் வேளூரில் மகாசந்நியாச பூர்வக ருத்திரஜப மண்டலாபிஷேகம் ஆரம்பம். ஸ்ரீ உமாபதி சிவாசாரியர் குருபூசை.

30—4—88 சனி, ஸ்ரீ நரசிம்ம ஜெயந்தி, திருவையாறு, திருக்கடவூர். திருப்பனந்தாள், சீகாழி முதலிய தலங்களில் சைத்ரோற்சவ தீர்த்தம். குத்காலத்தில் ஸ்ரீ பஞ்சமூர்த்திகள் காவிரியில் தீர்த்தம் கொடுத்தருளல். ஸ்ரீ இசைஞானியார் குருபூசை.

1—5—88 ஞாயிறு, சித்ராபௌர்ணமி, சித்ரகுப்த பூசை. ஆகாமாவை. மாத பூஜையில் மருக்கொழுந்து சாத்துதல். திருவையாறு சப்தஸ்தானம். திருக்குறிப்புத்தொண்டர் குருபூசை.

2—5—88 திங்கள், தருமை ஆதீனம் 6 ஆவது குருமகாசந்நிதானம் ஸ்ரீலஸ்ரீ திருஞானசம்பந்த தேசிக சுவாமிகள் குருபூசை.

3—5—88 செவ்வாய், அக்னிநக்ஷத்திரம் ஆரம்பம். 49-53.

5—5—88 வியாழன், சங்கடஹரசதுர்த்தி.

6—5—88 வெள்ளி, சீகாழி ஸ்ரீ முத்துச்சட்டைநாதர் உற்சவம்.

8—5—88 ஞாயிறு, ஸ்ரீ நடராஜர் அபிஷேகம். தொண்டைமண்டல ஆதீனம் ஸ்ரீலஸ்ரீ ஞானப்பிரகாச தேசிக பரமாசாரிய சுவாமிகள் மடம் ஆதிகுரு முதல்வர் குருபூசை.

9—5—88 திங்கள், தருமை ஆதீனம் 12 ஆவது குருமகாசந்நிதானம் முத்துக்குமாரசுவாமி தேசிக சுவாமிகள் குருபூசை.

10—5—88 செவ்வாய், சித்திரைச் சதயம். ஸ்ரீ அப்பர் சுவாமிகள் குருபூசை. திருவாமூரில் ஸ்ரீ அப்பர் சுவாமிக்கு விசேஷ வழிபாடு. திருப்புகலூரில் ஸ்ரீ அப்பர் சுவாமிகள் மோக்ஷம்.

13—5—88 வெள்ளி, பிரதோஷம். தருமை ஸ்ரீ மாரியம்மன் திருவிழா.

வெளிநாடு Regd. No. TN / M. M.

தருமை ஆதீனம்

அனைத்துலக சைவசித்தாந்த ஆராய்ச்சி நிறுவனம்

ஆங்கில வெளியீடுகள் விபரம்

1. Journal Vol. 1. No. 1
   Double Crown 1×8 Pages 91. Rs. 25-00
2. Journal Vol. 1. No. 2
   Double Crown 1×8 Pages 78. Rs. 25-00
3. Journal Vol. 2. No. 1
   Double Crown 1×8 Pages 35. Rs. 25-00
4. Journal Vol. 2. No. 2
   Double Crown 1×8 Pages 92 Rs. 25-00
5. Journal Vol. 3. No. 1
   Double Crown 1×8 Pages 86 Rs. 10-00
6. A Critique of Saiva Siddhanta Epistemology With Special Reference To Cit-Sakti (Pamphlet)
   Double Crown 1×16 Pages 16 Rs. 2-00
7. Five Naayanmaar
   Double Dimmy 1×8 Pages 60 Rs. 7-50
8. Mudralakshanam
   Double Dimmy 1×16 Pages 32 Rs. 15-00

கிடைக்குமிடம் :-

இயக்குநர்,
அனைத்துலக சைவசித்தாந்த ஆராய்ச்சி நிறுவனம்,
தருமபுரம், மயிலாடுதுறை – 609 001.
தஞ்சை மாவட்டம்.

Printed & Published by V. Ramaiah Pillai Manager, Dharmapuram, at the Gnanasambandam Press. Dharmapuram, Mayiladuthurai 10-4-88.